www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது . Registered as a Newspaper at the G.P.O



# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණොට්ටම්

வெளியீடு: 21 | 01 கார்த்திகை 1995 | விலை: ரூபா 7.00

★ வெலி ஓயாவில் 200இற்கு மேற்பட்ட புலிகள் பலி

★ இடிமுழக்கத்தில் 150இற்கு மேற்பட்ட புலிகள் பலி

★ சூரிய வெளிச்சத்தில் 100இற்கு மேற்பட்ட புலிகள் பலி

★ இவற்றில் ஆயிரத்திற்கு மேற்பட்ட புலிகள் படுகாயம்

★ குடாநாட்டை இராணுவத்தால் இரண்டாக ஊடறுக்கப்பட்ட நிலையில்

# யாழ் குடாவை விட்டு புலிகள் பின்வாங்குமா?

யாழ்குடா நாட்டை கைப்பற்றுவதற்காக சிறிலங்கா இராணுவத்தின் பெரும் பகுதி யாழ்ப்பாணத்தில் முகாமிட்டுள்ளது. பலாலி, பூநகரி, ஆனையிறவு, மண்டைதீவு போன்ற இடங்களில் இவை முகாமிட்டிருப்பதுடன், குடாநாட்டின் மையப்பகுதியை ஊடறுத்து குடாநாட்டின் இருபகுதிகளுமே சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் உள்ளது.

யாழ் நக்ரைக் கைப்பற்றுவதற்காக புதுப் புது இராணுவ உத்திகளும், புதுப்புதுப் பெயர்களில் உருவாக்கப்படுகின்றன. இடிமுழக்கம், சூரியவெளிச்சம் போன்ற பெயர்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் புலிகள் பாரிய இழப்புகளைச் சந்தித்துள்ளதுடன், இதை எழுதும்பொழுது இராணுவம் 30 கிலோமீற்றர் நிலப்பரப்பினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது.

வடகிழக்கு பருவமழை தடங்கல்களையும் தாண்டி, இராணுவம் யாழ்நகரை நோக்கி முன்னேற உறுதிபூண்டுள்ளதாக நம்பகரமாகத் தெரிகின்றது.

புலிகளின் பாரிய இழப்புகளும், பல நூற்றுக்கணக்கில் புலி உறுப்பினர்கள் காயம் அடைந்து போரில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு முடியாமல் இருப்பதாலும், புலிகள் ஏற்கனவே பெரும் நிலப்பரப்பை இராணுவத்தினரிடம் இழந்துவருவதைக் காண முடிகின்றது.

யாழ்குடாநாட்டுத் தகவல்களின்படி, தாம் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு பின்வாங்க வேண்டிய நிலை ஏற்படலாம் என பொது மக்களுக்கு அவர்கள் கூறிவருவதாக அறியப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் உரையாற்றும் புலித்தலைவர்கள், தம்மிடம் போதிய ஆட்பலமும் நிதிவளமும் இல்லை என்றும் நீங்கள் பிள்ளைகளையோ நிதியையோ தரமறுப்பதால் நாம் பின்வாங்க வேண்டி ஏற்படலாம் என்றும் கூறிவருகின்றனர்.

## பதவி இறக்கப்பட்ட புலித் தலைவர்கள்

புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா மற்றும் யோகி ஆகியோரைத் தொடர்ந்து புலிகளின் உளவுப்பிரிவுப் பொறுப்பாளர் பொட்டம்மான், யாழ் அரசியல் பொறுப்பாளர் டொமினிக் போன்றோர் பதவியிறக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

வெலிஓயாத் தாக்குதலில் தோல்வியடைந்ததற்கு, இரகசியங்கள் வெளியேதெரிந்திருந்ததுதான் காரணமாக இருந்தது என்றும், இதற்குப் பொட்டம்மான் பொறுப்பேற்று பதவியிறக்கம் செய்யப்பட்டதாக ஒரு பகுதியினர் பேசிக்கொள்கின்றனர்.

ஆனால் புலிகளின் யுத்த நிதிக்கான 1000கோடி நிதி சேகரிப்பில் பெருமளவிலான ஊழல்கள் நடைபெற்றுள்ளதாகவும், டொமினிக் என்பவர் 75 இலட்சத்தையும், பொட்டம்மான் 50 கோடி ரூபாய் பணத்தையும் கையாடி இருப்பது இவர்களின் பதவியிறக்கங்களுக்கு காரணம் என்று தெரியவருகின்றது.

அப்பாவி மக்களிடம் மாதாந்த வேதனங்களை முழுமையாகப் பறித்தும் வியாபாரிகளிடம் லட்சக்கணக்கில் கப்பம் வாங்கியும் சேகரித்த பணம் புலிகளின் ஒருசிலரின் சுகபோக வாழ்க்கைக்காக இவ்வாறு விரயமாக்கப்படுகின்றது.

ராஜீவ்காந்தி, பிரேமதாசா, காமினிதிசாநாயக்கா போன்றோரையும் பத்மநாபா போன்ற ஏனைய இயக்கத் தலைவர்களையும் கொலை செய்வதில் முன்னணிப் பாத்திரம் வகித்ததுடன், இன்னும் பலநூறு கொலைகளின் காரணகர்த்தாவாக இருந்தவர் பொட்டம்மான்.

மாத்தையா, யோகி இல்லாமல் போனதும் பொட்டம்மான், டொமினிக் போன்றோர் பதவியிறக்கம் செய்யப்பட்டதும், இன்னும் புலித் தலைவர்கள் போர்க்களத்தில் கொல்லப்படுவதும் புலிகளுக்குப் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்திவருவதாக அவர்கள் தரப்பிலிருந்து அறியப்படுகின்றது.

## புலிகளுக்கு எந்த மக்களைப் பற்றியும் கவலையில்லை தங்கள் நலன் ஒன்றே குறி!

புலிகளின் குண்டுத் தாக்குதல்களினால் கொலன்னாவை மற்றும் ஊறுகொடவத்தையிலுள்ள எண்ணெய்த் தாங்கிகள் வெடித்து தீப்பற்றிக் கொண்டது. 19ம் திகதி இரவு 1.30 மணியளவில் நடந்த இச்சம்பவத்தில் பல எண்ணெய்க் குதங்கள் எரிந்து நாசமாகியதுடன், முழுக் கொழும்புநகரமுமே கரும் புகையால் மூடிக்கொண்டது. இதனால் அரசாங்கத்திற்கு 200கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டிருப்பதுடன், ஆகாயப் படை, இராணுவம் மற்றும் காவலாளிகள் உட்பட 20இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் 7 புலிகள் கொல்லப்பட்டும், 4 புலிகள் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் இராணுவத் தாக்குதல்களை திசைதிருப்பும் இப்படியான செயற்பாடுகள் மூலம் தமிழ் சிங்கள இனக் கலவரங்களை உருவாக்கி, அதன்மூலம் சர்வதேச ரீதியில் அரசுக்கு ஓர் களங்கத்தை ஏற்படுத்துவதே புலிகளின் நோக்கமாக இருந்தது.

19ம் திகதி இக்குண்டு வெடிப்புத் தாக்குதலை நடத்திய புலிகள், 20ம் திகதி பதவியா வெலிக்கந்தை, அம்பாறை போன்ற இடங்களில் 65இற்கும் மேற்பட்ட அப்பாவிச் சிங்கள மக்களை (இதில் பெரும்பான்மை பெண்களும் குழந்தைகளும்) வெட்டிக் கொலை செய்ததானது புலிகளின் உண்மையான நோக்கத்தை தெளிவாக்குகின்றது.

கொழும்பில் 20ம், 21ம் திகதிகளில் மிகவும் பதட்டமான சூழ்நிலை தோன்றியும் கூட, அரசாங்கத்தின் முயற்சியால் அது தவிர்க்கப்பட்டது.

குண்டு வெடிப்பினால் எற்பட்ட தீயை அணைப்பதற்கு இந்தியா தனது விமானப் படை விமானத்தில் அதற்குத் தேவையான "அக்குவாபோம்" திரவத்தை உடனடியாக அனுப்பியதுடன், தீயை அணைப்பதற்கான வல்லுனர்களையும் கூட அனுப்பி உதவியது. 1990ம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படை இலங்கையிலிருந்து வெளியேறியதன் பின்னர் இந்தியா இலங்கைக்கு கொடுத்த முதலாவது உடனடி உதவி இது என்பது குறிப்பிடத்தக்கது. கிடைத்த உதவிக்கு முக்கியமான அமைச்சர்கள் பலரும் மீண்டும் மீண்டும் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

## தீபாவளிச் செய்தி

வாசலில் ரத்தம் தெறிக்க
வாழ்க்கை பொருக்கழைக்க
விடுதலை வேண்டி மண்ணில்
விளைந்தது வீரம் எங்கும்
போர்த் தொழில் விந்தை கண்டோம்
விந்தையில் மயங்கிக் கொண்டோம்
வீரமே தலையிலேறி
விதியினை எழுதலாச்சு
மனிதராய் வாழ்வைக் காண
மறுப்பதே வீரமாச்சு
வாழ்ந்திடப் போராடுதல் போய்
போருக்குள் வாழ்வைப் புதைத்தோம்
மரணத்துள் வாழ எண்ணி
மரணமே வாங்கக் கண்டோம்
சாவது தவிர வேறு
சாதனை இல்லை என்றோம்
நேற்று வாழ்ந்ததையே
நினைவில் ஏங்க வைத்து
நடப்பு எமை வருத்தும்
நாளை எது பிறக்கும்?

வாழ்த்துக்கள் பகிர்ந்து மகிழ - அந்த
வாழ்க்கை என்று வரும்?



படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## அரசின் கவனத்திற்கு....

வடகிழக்கு பருவப்பெயர்ச்சி மழைக்கான இடிமுழக்கமுடன் யாழ்ப்பாணத்திலும் இடிமுழக்கங்கள் கேட்கத் தொடங்கியுள்ளது. செல்வீச்சுக்கள், குண்டுவீச்சுக்கள் என அரசின் இடிமுழக்கங்கள் ஆரம்பமாகியுள்ளன. செல்வீச்சுக்களாலும் குண்டுவீச்சுக்களாலும் நீர்வேலி, கோப்பாய், இருபாலை மக்களும் தமது பிரதேசங்களைவிட்டு வெளியேறத் தொடங்கியுள்ளார்கள். பாடசாலைகள் யாவும் அகதி முகாம்களாக மாற்றப்பட்டு வருகின்றது. மழை வெள்ளம் போன்றவற்றால் தொற்றுநோய்களும் சிறுகசிறுக ஆரம்பிக்கின்றன. ஆனால் அம்மக்களுக்கு அகதிகளாக வாழ்வதற்குரிய குறைந்தபட்ச உதவிகள் கூட இல்லை.

யாழ் அரசாங்க அதிபர் பொன்னம்பலம் அவர்கள் முழுக் குடாநாடுமே அரிசி, மா, சீனி போன்ற முக்கியமான பொருட்களின் பற்றாக்குறையால் பஞ்சம், பசி, பட்டினிக்குத் தள்ளப்படுகின்றது என்று கூறுகின்றார். ஆனால் புனர்வாழ்வு, புனர் நிர்மாண அமைச்சின் செயலாளர் அவர்கள் குடாநாட்டில் தேவையான பொருட்கள் கையிருப்பில் இருப்பதாக கூறுகின்றார். மக்கள் பொருட்களுக்கு வழியின்றி அலைவதாக அங்கிருந்து வருபவர்கள் கூறுகின்றார்கள்.

கொழும்பில் அதிகாரப் பகிர்விற்கான ஆலோசனைகளை முன்வைத்தவுடன் அது தொடர்பான கருத்துக்களைத் திருத்தங்களை தமிழ் மக்களிடம் இருந்து அறிவதற்குப் பதிலாக மிகவும் அவசரப்பட்டு குடாநாடு மீதான யுத்தமொன்றைத் தொடங்கியுள்ளார். அவரின் ஆலோசனைகள் குடாநாட்டு தமிழ் மக்களுக்குத் தெரிந்திருக்காது என்பதால் திடீரென யாருடைய ஆலோசனையின் பேரிலோ குண்டுகளுக்கு பதிலாக துண்டுப்பிரசுரங்கள் போடுகின்றனர். தனது ஆலோசனைகளை அங்கீகரிக்கும்படியும், விருப்பம் இல்லாமலே யுத்தத்தை நடாத்துவதாகவும் தமிழ் மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். இந்தத் துண்டுப் பிரசுரங்களை முன்னரே தமிழ் மக்களுக்குக் கொடுத்து அவர்களது கருத்துக்களையும் கேட்டிருப்பாரேயானால் நிச்சயமாக அவருக்கு ஆதரவான கருத்துக்களைத் திரட்டியிருக்க முடியும். அதுமாத்திரமல்லாமல் இதுதொடர்பான பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தும்படி மக்களும் புலிகளை நெருக்கியிருப்பார்கள். ஆனால் அதனை விடுத்து அவசரமாகவே யுத்தத்தை தொடங்கி லட்சக் கணக்கில் மக்களை அகதிகளாக்கி, அகதிமுகாம்களுக்கு துரத்திக் கொண்டிருக்கையில் இத் துண்டுப்பிரசுரங்கள் எவ்வித பிரயோசனத்தையும் ஏற்படுத்தாது.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர்கள் ஜனாதிபதியைப் போன்று காலம்தாழ்த்தியே ஆலோசனை வழங்குவதாகத் தோன்றுகின்றது. நாம் கடந்த கண்ணோட்டத்தில் குறிப்பிட்டதுபோன்று இவ்வாலோசனைகள் தொடர்பாகப் பேசுவதற்கு தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை தமிழ்கட்சிகள் ஜனாதிபதியுடன் நடத்துவதற்கு எவ்விதமான ஏற்பாடுகளும் இல்லை. ஈ.பி.ஆர்.எல்.எப் உட்பட பல தமிழ் கட்சிகள் இது தொடர்பாக திருத்தங்களைக் கொடுத்தும்கூட அதுபற்றி கலந்துரையாடுவதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. இதனைப் போன்றே இவ்வாலோசனைகளின் கருத்துக்களைக் கேட்காமலேயே மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

எனவே துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் தனது ஆலோசனைகளுக்கு ஆதரவு வேண்டுமெனில் முதலாவதாக இவ்வாலோசனைகள் தொடர்பாக தமிழ் மக்களின் கருத்துக்களைக் கேட்பதற்கு அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். பல்வேறுபட்ட சமூக பொருளாதார அமைப்புக்களும் தமது கருத்துக்களை ஜனாதிபதிக்கோ அரசாங்கத்திற்கோ சொல்வதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். அதுமாத்திரமல்லாமல் ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போல் இது தொடர்பாக ஒழுங்குமுறையான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இல்லாதுவிடின் ஆலோசனைகள் அர்த்தமற்றதாகப் போய் யுத்த அழிவுகளே மிஞ்சும். ஜனாதிபதியவர்களும் அவரின் ஆலோசகர்களும் இவற்றை கருத்தில் எடுக்கும்படி வேண்டுகிறோம்.

## புலிகள் கவனத்திற்கு....

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, அவர்களின் நலன்களுக்காக போராடுகின்றோம் என்பவர்கள் தமிழ் மக்களை யுத்தகாலத்திலும் கூட மிகவும் கொடூரமாக நடத்துவதென்பது காட்டில் இருக்கும் புலிகளுக்கு சிலசமயம் அது உகந்ததாக இருக்கலாம். ஆனால் விடுதலைப்புலிகளுக்கு மோசமான பின்விளைவுகளையே இது உருவாக்கும்.

யுத்தத்திற்காக ஆயிரம் கோடி ரூபாய் அறவிடுதல் என்ற பெயரில் வடமாகாணத்திலிருக்கக்கூடிய அத்தனை குடும்பங்களுமே நிதி கொடுக்கும்படி அச்சுறுத்தப்படுகின்றார்கள். ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட சாதாரண கூலி வேலை செய்பவர்கள்வரை யுத்தத்திற்கான நிதியை வழங்கும்படி அச்சுறுத்தப்படுகின்றார்கள். இதில் மிகவும் கொடூரமானது என்னவெனில் இராணுவ நடவடிக்கைகளினால் வீடு, நிலம், சொத்து சகலவற்றையும் இழந்து அகதிகளாக அகதிமுகாமில் தஞ்சமடைந்தவர்களே யுத்த நிதி கொடுக்கவில்லை என்பதற்காக புலிகளினால் அகதிமுகாம்களிலிருந்து கைது செய்யப்படும் மிகப்பரிதாபகரமான சூழல்களை நாம் நேரில் பார்க்கின்றோம்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் பொருட்கள் பற்றாக்குறை. பொருட்களின் விலைகளோ பலமடங்கு உயர்வு. பொருட்கள் கிடைப்பதெனில் அது புலிகளின் கடைகளிலேயோ அல்லது அவர்களது ஆதரவாளர்களின் கடைகளிலேயோ கிடைக்கின்றது. அவர்களிடம் பொருட்களின் விலை ஏன் இவ்வாறு உயர்ந்து விட்டது என்று கேட்கமுடியாது. அதேசமயம் எந்தவிதமான தொழில்களுமற்று மக்கள் தமது உயிர்களை கையில்பிடித்த வண்ணமே நாட்களை நகர்த்துகின்றனர். இப்படியான சூழ்நிலையிலும் கூட புலிகள் அவர்களை பணத்திற்கு மிரட்டுவதானது அவர்களின் மனிதாபிமானமற்ற, மக்களின் மேல் இரக்கமற்ற மிகவும் கொடூரமான சிந்தனைகளையே தெளிவாக்குகின்றது.

மக்களுக்கு உதவி செய்யாவிடினும் உபத்திரவம் கொடுக்காமல் இருந்தால் அதுவே புலிகள் செய்யும் பெரும்காரியமாக இருக்கும். தயவுசெய்து இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்தும்படி புலிகளின் ஆதரவாளர்களோ அல்லது அவர்களுக்கு நெருங்கியவர்களோ அவர்களிடம் கேட்கும்படிவேண்டுவதுடன், மக்களின் அவலநிலையை புலிகள் புரிந்துகொள்ள வேண்டும் என்று கோருகின்றோம்.



கடந்த மாதம் 3 ம் திகதி ம. பொ. சிவஞானம் அவர்கள் காலமானார். தமிழ்க்கடல், சிலப்பதிகாரத்தைக் கரைத்துக் குடித்தவர் சிலம்புச் செல்வரானவர் என்பதற்கெல்லாம் அப்பால் மக்கள் நேசம் கொண்டவராக, மனிதாபிமானியாக விளங்கியவர் என்பதுதான் அவரது மேலான சிறப்பு.

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் பின் வடகிழக்கு மாகாண சபையை நாம் பொறுப்பேற்றபோது, "சரியான சமயத்தில் தமிழ்மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கையாக, மாகாண அரசுப் பொறுப்பை ஏற்றிருப்பவர்களின் திசை நோக்கிக் கரங்குவிக்கிறேன்" என்று ஈழ மக்கள் மீதான நேச உணர்வில் நெகிழ்ந்து வாழ்த்தியவர். அந்தக்கால கட்டத்தின் தேவையை அந்த நேரத்திலேயே சரியாகப் புரிந்து கொண்டு ஊக்கப்படுத்திய தமிழ்ப்பெருமகன் அவர். 'தமிழ் மக்களைப் பாழ்ங்கிணற்றில் தள்ளிவிடப் போகிறார்கள்' என்று புலிகளின் யுத்தவெறி கண்டு எச்சரித்தவர்.

தோழர் பத்மநாபா மீது, "தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுகிற, தமிழகத்தின் மகளை மணந்த என் தாயகத்தின் மாப்பிள்ளை" என்னும் விசேட பாசங் கொண்டிருந்தவர்.

அந்தப் பெரியவருக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப் தனது அஞ்சலியைச் செலுத்துகிறது.

> "திரு. பத்மநாபா அரசியலில் இடதுசாரி மனப்பான்மை உடையவர் என்பதால் அவரை நேசித்தேன். அவர் கொண்ட அரசியல் கொள்கையிலும், அவர் நம்பிக்கை வைத்திருந்த ஆயுதப் புரட்சியிலும் எனது நிலை எதுவாகினும் தமிழினத்தின் உரிமை வாழ்வில் அவர் கொண்டிருந்த உறுதி என்னைப் பெரிதும் கவர்ந்தது.
>
> ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்படிக்கைப்படி உருவான தமிழ் மாகாணத்திற்கு முதலமைச்சராக வந்திருக்க வேண்டிய திரு.பத்மநாபா பதவிப்பொறுப்பு ஏற்க மறுத்தமையும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. அதன் பின்னர் அவரை அதிகமாக நேசிக்கலானேன். தமிழகத்தின் மகளை மணந்த என் தாயகத்தின் மாப்பிள்ளை அவர்."
>
> – தோழர் பத்மநாபா நினைவு மலரில் ம.பொ.சி.

## குண்டுவெடிப்பில் ஈரோஸ் உறுப்பினர் மரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல மின்மாற்றிகள் இதுவரை புலிகளினால் சேதமாக்கப்பட்டுள்ளன. செங்கலடி, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி போன்ற பகுதிகளில் உள்ள மின்மாற்றிகள் இவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திற்கு முழுமையாக மின்சாரம் இல்லாமல் செய்வதே இவர்களின் நோக்கமாகும். யாழ்ப்பாணம் போன்ற ஒரு சூழ்நிலையை மட்டக்களப்பில் உருவாக்கி மக்களை அரசுக்கு எதிராக திருப்பிவிடலாம் என எண்ணுகின்றார்கள் போல் உள்ளது.

சில தினங்களுக்கு முன் மட்டக்களப்பு நகருக்குள் அதிகாரி ரோட்டில் இருக்கும் மின்மாற்றியையும் செயல் இழக்கச் செய்ய புலிகள் முயற்சித்தனர். இதற்கு மட்டக்களப்பில் வசிக்கும் ஈரோஸில் உறுப்பினராக இருக்கும் கஜன் என்பவர் பயன்படுத்தப்பட்டார். குண்டு வைக்காவிடின் இவர் கொலை செய்யப்படுவார் என மிரட்டியதால் இவர் குண்டுவைக்கச் சென்றதாகவும், செல்லும் வழியலேயே குண்டு வெடித்ததால் அதைக் கொண்டு சென்ற கஜன் என்பவர் அதே இடத்தில் கொல்லப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக முரளி என்ற இன்னொரு நபரும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு ஈரோஸ் காரியாலயம் சோதனையிடப்பட்டு அங்கு வெடிமருந்துகளும், அது தொடர்பான உபகரணங்களும் கைப்பற்றப்பட்டதாக அறியப்படுகின்றது.

> "ஜனநாயகம் என்பது நாளைய எல்லாவற்றையும் குணப்படுத்திவிடக் கூடிய அதிசய மூலிகை என்று சொல்ல முடியாது. ஆனாலும், நமது மக்களிடைய அடைபட்டுக் கிடக்கும் சக்திகளை அது நிச்சயமாக விடுவிக்கும்."
>
> - நோபல் இலக்கியப் பரிசு பெற்ற மெக்சிகோ எழுத்தாளர் ஆக்டோவியோ பாஸ்

### தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-2398

88/2, வாடிவீட்டு வீதி,
கல்முனை.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-2070

மன்னார்
☎ 023-2370

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

படிப்பகம்

www.padippakam.com



# இனிய தமிழ் மக்களே!...



இவ்வரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், தமிழ் மக்கள் மீதான இரண்டாவது கட்ட யுத்தம் உக்கிரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதலில் முன்னேற்றப் பாய்ச்சல் எனஆரம்பித்தவர்கள் இன்று இடிமின்னல் தாக்குதல், சூரியப் பிரகாசத் தாக்குதல் எனத் தொடர்கின்றார்கள்.

ஒருபக்கத்தில் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அரசியல் ஆலோசனைகள், அதுதொடர்பான காரசாரமான விவாதங்கள் நடக்கும் அதேசமயம், வடபகுதியில் உக்கிரமான யுத்தமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தில் குடாநாட்டின் சனத்தொகையில் பாதிக்கு மேலானோர் அகதிகளாக செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அதேசமயம், வட–கிழக்கு பருவப்பெயர்ச்சிக் காற்றினால் ஏற்பட்ட பருவகால மழையும் ஆரம்பமாகியுள்ளது. வீதிப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டு, கடல் போக்குவரத்து எப்பொழுது என தெரியாத நிலையில் குடாநாட்டு மக்கள் வரலாறு காணாத பஞ்சம், பசி, பட்டினிக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இன்னும் சிலவாரங்களுக்குள் அவர்களுக்கான உரிய சாப்பாட்டு வசதி, மருத்துவ வசதி கிட்டாமல் போகுமேயானால் யாழ்ப்பாணத்து பெரும்பகுதி மக்கள் – அகதிமுகாம் வாழ்க்கை பசி, பஞ்சம், பட்டினி, மழை, வெள்ளம் போன்றவற்றால் மிகவும் பாரதூரமான நோய்களுக்குட்பட்டு இவர்களில் ஆயிரக்கணக்கானோர் மரணிக்க வேண்டி ஏற்படலாம்.

ஒருபக்கம் யுத்தமும் மறுபக்கம் பஞ்சமும் சுகாதாரக் கேடுகளும்... அமைதிக்காக அளிக்கப்பட்ட வாக்குகள் அழிவுக்காகவும், அவலத்திற்காகவும் மாற்றப்படுவதானது கவலைக்குரியதும் வேதனைக்குரியதுமாகும்.

### அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

இன்று பாராளுமன்றத்தில் வட-கிழக்கிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட (சரியோ தவறோ) புளொட், த.வி.கூ, ஈ.பி.டி.பி.ஐச் சேர்ந்த 17 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இந்த யுத்தத்தின் கொடூரம், மக்களின் துன்பச்சுமைகள் இவற்றை இவர்கள் அறியாதவர்களா?

காலைப் பத்திரிகையில் இவற்றைக் கண்டித்து பாராளுமன்றத்தில் பகிஷ்கரிப்போம் என்பவர்கள் பின்னர் பாராளுமன்றத்தில் இவற்றைக் கண்டித்துப் பேசினோம் என்கின்றார்கள். அதன் பின்னர் இவ்வளவு நாளும் அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்த நாங்கள் இப்பொழுது அவசரகாலச் சட்டத்தைக் கண்டித்து நாம் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்கின்றார்கள்.

மொத்தத்தில் எவ்வாறெல்லாம் குத்துக்கரணம் போடமுடியுமோ, எவ்வாறெல்லாம் தமிழ் மக்களை முட்டாளாக்க முடியுமோ அவற்றைச் செய்து பத்திரிகையில் தங்களைப் பிரபல்யப்படுத்திக் கொள்கின்றார்களே தவிர, குறைந்தபட்சம் இப் பட்டினிக் கொடுமைகளையாவது நிறுத்த ஏதும் காத்திரமான நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரியவில்லை.

அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாகச் சிலரும், அதில் கலந்துகொள்ளாமல் வேறு சிலரும் இருக்கின்றார்களே தவிர மொத்தத்தில் யுத்தத்திற்கு ஆதரவாகவே இவர்களது செயற்பாடுகள் அமைந்து விடுகின்றன.

ஒரு அங்கத்தினர் பெரும்பான்மைப் பலத்துடன் இருக்கும் இவ்வரசாங்கத்தை சரியான திசைவழியில் நடாத்த நிச்சயமாக இப்பதினேழு உறுப்பினர்களாலும் முடியும். ஆனால் அவர்களுக்கான சலுகைகள், அவரவர்களுக்கான அரசியல் எதிர்காலங்கள் என்பவற்றைப் பற்றியே சிந்திக்கின்றார்களே தவிர தமிழ் மக்களின் எதிர்காலம், அவர்களின் பாதுகாப்பு, அவர்களின் நியாயமான உரிமைகள் தொடர்பாக இவர்கள் எவ்வளவுதூரம் அதற்காக உறுதியாகச் சிந்திக்கின்றார்கள்?

கரடி பிறையைக் காண்பது போல் எப்பொழுதாவது ஒருமுறை இப்பாராளுமன்றத் தலைவர்கள் கூடி ஜனாதிபதியைச் சந்திக்கின்றோம் என பத்திரிகைக்கு அறிக்கைகள் வெளியிடுகின்றார்கள். ஆனால் அப்பொழுதுகூட தீர்க்கமான கோரிக்கைகளை வைத்து மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைக் கூட இவர்களால் தீர்க்க முடியவில்லை.

ஈ.பி.டி.பி.யைப் பொறுத்தவரையில் அவர்களுக்கான தேர்தல் வழக்கிலிருந்து தப்பித்து எப்படியும் ஐந்து வருடங்கள் தமது பதவியைக் காப்பாற்றுவது என்ற கவலை, தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையிலும் அவர்களுக்குள்ளேயே பல்வேறுபட்ட கருத்து முரண்பாடுகள், வெளிநாடு சென்ற மட்டுநகர் உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் கூட இன்னும் திரும்பிவரமுடியாத நிலைமை.

இதனைப் போன்றே புளொட் இயக்கத்தினரும் காலம்கடந்துவிட்டால் போதும் என்ற நினைப்பில் செயற்பட்டு வருகின்றார்களேயன்றி, முன்முயற்சி எடுத்து இப்படியான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண யாரும் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை.

### அன்பான தமிழ் மக்களே!

இவை இவ்வாறு இருக்க, தமிழீழ விடுதலைப் புலிகளும்கூட மக்களை மேலும் மேலும் எவ்வாறு துன்புறுத்துவது என்ற அடிப்படையிலேயே இயங்கிவருவதாகத் தோன்றுகின்றது.

எந்தவிதமான தூரநோக்கின்றியும் தமது பலத்தை அதீதமாக மதிப்பீடு செய்து, மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதற்கும், துன்பப்படுவதற்கும் வழிவகுக்கின்றார்களே தவிர, அவர்களைப் பாதுகாப்பதற்கோ அவர்களை பட்டினிச் சாவிலிருந்து மீட்பதற்கோ இவர்களால் ஏதும் செய்ய முடியாமலேயுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பொருட்களெதுவும் வாங்குவதானால்,அது புலிகளின் கடையிலேயேஉள்ளது. ஆனால் அப்பொருட்களின் விலையோ விண்ணைமுட்டும்அளவிற்கு உள்ளது.

யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் புலிகள், அங்குள்ள பொருட்களின் விலையை ஓர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும். ஆனால் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குப் பதிலாக சகல கடைகளையும் இல்லையேல் சகல பொருட்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து எவ்வளவு கொள்ளை லாபம் அடிக்கலாம் என்றே இவர்கள் சிந்திக்கின்றார்கள்.

இதனால் மரத்தில் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல் மக்களை துன்பத்திற்கு உள்ளாக்கியதுமல்லாமல் வாழ்க்கையின் மீதே ஒரு விரக்தியை ஏற்படுத்தி வருகின்றார்கள்.

அதுமாத்திரமல்லாமல், இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றிவிடும் என்ற எதிர்பார்ப்பில் தமது தளங்களையும் முகாம்களையும் குடாநாட்டுக்கப்பால் கிளிநொச்சி, முல்லைத்தீவிற்கு நகர்த்துவதிலேயே நாட்டம் காட்டுகின்றார்கள். ஆனால் சாதாரணமக்கள் எந்தவித போக்குவரத்து வசதிகளுமின்றி ஏனைய அடிப்படைவசதிகளுமின்றி அவர்களது தனிமனித வாழ்க்கை முழுமையாக சீரழிக்கப்பட்டு நடைப்பிணங்களாக அகதிமுகாம்களுக்கும் தெருக்களுக்கும் விரட்டப்பட்டுள்ளார்கள்.

### அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

இந்த அவலங்களிலிருந்து நாங்கள் மீளவேண்டாமா? எமது பிள்ளைகளுக்கு, எமது சமூகத்திற்கு, எமது இனத்திற்கு ஒரு எதிர்காலம் இல்லையா? எமது முழு இனமுமே அழித்தொழிக்கப்பட வேண்டுமா? தூரப்பார்வையற்ற – தீர்க்கமான சிந்தனையற்ற ஒரு குழுவின் கொலை வெறித்தனத்திற்கு அடிபணிந்து நாம் இன்னும் ஆமாம்சாமி போடப் போகின்றோமா?

எமது மக்களின் எதிர்காலத்தை ஆக்கவோ அல்லது அழிக்கவோ உள்ள சக்தி உங்கள் கைகளில் உள்ளது. இராணுவத்தினரால் அநியாயமாக நூற்றுக்கணக்கில் நாம் சாவதிலும்விட அராஜகத்திற்கெதிராக அட்டூழியங்களுக்கெதிராக நீதிக்காக எமது கௌரவமான எதிர்காலத்திற்காக நாம் போராடி மடிவது சிறப்பானதும் பெருமையானதுமாகும்.

வடகிழக்கிலிருக்கும் நாம் ஒன்றுபட்டு எமது நியாயத்தை எடுத்துக்கூறுவோம். எமக்கு ஆதரவாக தென்பகுதியிலும், வெளிநாடுகளிலிருக்கும் ஆதரவான முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் எம்முடன் இணைத்துக்கொள்வோம். எம்மால் முடியும் என்ற துணிச்சலுடன் போராடுவோம். எமது உரிமைகளை வென்றெடுப்போம்.

*மறுமடலில் சந்திக்கும்வரை...*
*உங்கள் தோழன்*
*சுரேஷ் பிரேமச்சந்திரன்.*



**"தூரப்பார்வையற்ற தீர்க்கமான சிந்தனையற்ற ஒரு குழுவின் கொலை வெறித்தனத்திற்கு அடிபணிந்து நாம் இன்னும் ஆமாம்சாமி போட்டுக்கொண்டிருக்கப் போகின்றோமா?"**

---

**தணிக்கை:** மக்களுக்கு உண்மை தெரியாமல் செய்தல். அல்லது யுத்தத்தில் சிக்குண்ட மக்களின் துன்பங்களை வெளிவராமல் தடுத்தல்.

கடந்த காலத்தில் எழுதுவதற்கும் பேசுவதற்குமான உரிமைக்காக,போராட வேண்டியிருந்தது. ரிச்சர்ட் டீ சொய்சா, ரஜனி திராணகம போன்றவர்கள் இதன் குறியீடாக இருந்தார்கள். ஆனால் தற்போது மீண்டும் தணிக்கை. முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா போன்றவர்கள் எக்காரணங்களுக்காக பத்திரிகையாளர்களை அச்சுறுத்தினார்களோ அதே காரணங்களுக்காக தற்போது பத்திரிகை தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.



உலகில் உண்மைகளை எப்போதுமே மூடிமறைத்துவிட முடியாது. உண்மைகளை மூடிமறைக்குமிடத்து அங்கு ஜனநாயகம், மனிதஉரிமைகள் பற்றிய கேள்விக்கே இடமில்லை.

அரசுக் கட்டில் ஏறும்வரை இவைபற்றி வாய்கிழியக் கத்துகிறார்கள்,ஊர்வலம் செல்கிறார்கள். ஆனால் அதிகாரபீடத்தில் அமர்ந்ததும் அச்சுப்பிசகாமல் அதே காரியங்களைச் செய்கிறார்கள். மக்கள்கூட்டணியின் ஒருவருடம் பூர்த்தியாகவில்லை, அதற்குள் பத்திரிகை சுதந்திரத்திற்கு சமாதி கட்டியாயிற்று.

வதந்திகள் அவதூறுகள் பரப்புவதில் சில பத்திரிகைகள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்கின்றன. உண்மைதான் ஆனால் அத்தகைய வதந்திகளையும் அவதூறுகளையும் பிரச்சாரஊடகங்களினால் முறியடிக்கலாமே தவிர, உண்மைகளை மறைக்கும் தணிக்கைமுறையைக் கொண்டு வருவதால் அல்ல.



வாவிகளில் பிணங்கள் மிதப்பதற்குக் காரணமான சூத்திரதாரிகளின் கதி என்னாயிற்று? கொஞ்ச நாள் வாவிகளில் பிணங்கள்மிதப்பு. ஒரே திகில். பீதி. 'சூத்திரதாரிகள் சிக்கினர்' என்று கொட்டை எழுத்துக்களில் பத்திரிகைத் தலைப்புக்கள் வந்தன. இராணுவத்தையும் விசேட அதிரடிப்படையையும் சேர்ந்த சிலர் இதில் சம்பந்தப்பட்டதாகப் பட்டியலும் வந்தது. விசேடஅதிரடிப்படை தலைமையகம் இக்கொலைகளுக்கு பயன்படுத்தப்பட்டதாக செய்திகளும் வந்தது.

ஆனால், இன்னும் ஆங்காங்கே பிணமிதப்பும், மர்மக் கொலைகளும் ஆட்கடத்தல்களும் தொடர்கின்றன. கைதான கதை அப்படியே அமுங்கிவிட்டது. அமுங்கிவிட்டதா அமுக்கப்பட்டுவிட்டதா? பத்திரிகைத் தணிக்கை இருப்பதால் இதுவும் மக்களுக்குத் தெரியாமல் போய்விடுமோ?

இந்த விசாரணைகளில் விசேடமான சில விடயங்கள் இருக்கின்றன. ஏனெனில் வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் இருந்த 150 இற்கு மேற்பட்ட அகதிகளுக்கு என்ன நடந்தது என்ற மர்மம் இன்னும் மர்மமாகவே இருக்கிறது. இந்த மர்மம் அவிழ்வதும், மர்மமாகவே தொடரப் போவதும் தற்போதைய வாவிப் பிணமிதப்பு விசாரணையில்தான் தங்கியிருக்கிறது. விசாரணை தொடருமா? அல்லது அமுக்கப்படுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### ஹவ்லொக் வீதிப் படுகொலைகள்:

நாளாந்தம் 100, 200 என் அப்பாவித் தமிழர்கள் கைது செய்யப்படுகிறார்கள். வீதிச்சோதனைகளில் ஈடுபடும் பொலிசாரும் படையினரும் இந்தச் சாதனையைப் புரிகிறார்கள்.



தொடர்ச்சி 4

படிப்பகம்

www.padippakam.com





## கண்டதைச் சொல்லுகிறேன் - உங்கள் கதையைச் சொல்லுகிறேன் - இதைக் காணவும் கண்டு நாணவும் உமக்குக் காரணம் இல்லையென்றால் அவமானம் எனக்குண்டோ?

– ஜெயகாந்தன்

# உளறு வாயன்



## உளறுவாயனின் தர்ம நியாயங்கள் யாருக்கு இங்கே புரியப் போகிறது?

கண்டு கனகாலமாச்சு. "இந்தாளின்ரை கதைக்கு கால் கையில சங்கிலி மாட்டி பங்கருக்குள்ளதான் (ஐயாயிரத்திச் சொச்சத்திலை ஒண்டாய்)ப் போட்டிருப் பாங்கள்...." எண்டு நீங்கள் என்னை மறந்திருப்பியள். எனக்குக் கால் கையிலை சங்கிலி மாட்டிப் பிரயோசன மில்லை. வாய்க்குத்தான் பூட்டுப் போட வேணும்.... அதுகிடக்கட்டும்.

தேவைக்கு வாய்திறக்கிறவையையே மண்டையில போடவேண்டிய லிஸ்டில சேர்த்துவிட்டிடுகினம். என்ரை நிலைமையைக் கேட்பானேன்.... ஓம்..ஓம்.. யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க மனித உரிமைக்காறர், மற்றது கொழும்பில சமாதானம் வேணுமெண்டு கதைக்கிற தமிழ் ஆக்கள் எல்லாரையும் எட்டப்பன், காக்கை வன்னியன் வழியிலை வந்த தமிழ்த் துரோகியள் எண்டு 'பெரிசு'கள் சொல்லியிருக்கினம்.

அவை துரோகிகள் எண்டு அறிவிச்சிட்டினமெண்டால் பிறகென்ன, வாயைத் திறந்தாலும் சரி சாடைமாடையாய்க் கதைச்சாலும் சரி அவைக்குப் பிடிக்கேல்லையெண்டால் குண்டைக் கட்டிக்கொண்டு வந்து விழுவினம்தானே....! எங்கடை சனத்துக்கும் பேந்தென்ன, இந்த லொஜிக்கெல்லாம் நல்லா விளங்கியிடும். அவங்கள் துரோகியள் எண்டு அறிவிச் சிட்டாங்கள்... சரி, அடுத்தது 'போடுதல்' எப்ப எண்டு ஒருவித திறிலோடு காத்திருக்கும் சனம். மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை எண்ட மாதிரி இதுவும் பழக்கமாகியிட்டுது நமக்கு.

இந்த மாதிரியாகப்பட்ட தமிழ் மக்களின் விடுதலையை நோக்கிய வீரப் பயணத்துக்குள்ளை என்னை மாதிரியான ஒரு வாயையும் வைச்சுக்கொண்டு இந்த உயிரையும் வைச்சிருக்கிறதெண்டால் லேசுப்பட்ட காரியமோ?

அதுதான் என்னை அறிஞ்சவையின்ரை அறிவுரைப்படி கொஞ்சநாள் 'ரியூப்வெல்'லுக்குள்ளை இருந்தன். ஓமோம்! அண்டகிரவுண்டுக்கும் கீழ.

இப்ப வடக்கில இருந்து வந்தவையின்ர சில கதையளைக் கேட்டுட்டுத்தான்.... மழைபெய்து வெய்யில் எறிச்சால் புத்தாலை வெளிக்கிடுற உடும்பு மாதிரி ஒரு லாவல் லாவிப்போட்டுப் போகலா மெண்டு தலையைக் காட்டியிருக்கிறன். புலிப்பிடிக்குள்ள இருக்கிற சனம் அவையை எதிர்த்தும் சில பல கேள்வியளைக் கேட்கத் தொடங்குகினம் எண்டது புதினம்தானே?

பள்ளிக்கூடத்தில பிள்ளையளைப்பிடிச்சுக் கொண்டு போறதுக்குப் பெற்றார் எதிர்த்துக் கிளம்பினது கொஞ்சம் பழசு. இப்ப இடிமுழக்கம், சூரியப்பிரகாசத் துக்குப் பிறகு புன்னாலைக்கட்டுவன், புத்தூர், அச்சுவேலி, சிறுப்பிட்டி மக்கள் குடியெழும்பி தென்மராட்சிப் பக்கம் வந்து றோட்டுவழிய குந்தியிருந்து கேக்கிற கேள்வியள் புதுசு.

மண்மீட்பு நிதி... மண்மீட்பு நிதி எண்டு ஆமிரமாமிரமாய் வாங்கியனியள்! எங்கட நிலத்தில எங்களை வைச்சிருப்பியள் எண்டுதான் காசும் நகையுமாய்த் தந்தம். இப்ப எங்கட நிலமெல்லாம் பறிகுடுத்திட் டியள்.... நாங்கள் சொத்துப்பத்தெல்லாம் விட்டிட்டு றோட்டில நிக்கிறம்... மண் போச்சுதுதானே இனி காசை எண்டாலும் தாங்கோவன் எண்டு கேக்குதாம் குடியெழும்பி வந்த சனம்.

விட்ட மண்ணைத் திருப்பிப் பிடிக்கத்தான் இப்பவும் நீங்கள் நிதி தரவேணும் எண்டு மற்றவளமாய் மடக்குகினமாம் புலியள். "உங்களுக்குச் சாப்பாடு, கக்கூஸ் வசதிக் கெல்லாம் சத்தம்போட்டு அரசாங்கத்தைக் கேளுங்கோ... வாறதில பாதியை, அரசாங்கத்தை எதிர்த்துப் போராட வேணும் எங்களிட்டைத் தாருங்கோ எண்டு நிக்குதாம் புலி.

தமிழ் வீரம் மட்டுமில்லை, தமிழ் மூளையும் எப்பிடியெண்டு பாத்தீரா? எண்டிட்டுப் பெருமிதத்தோட கண்ணைச் சிமிட்டினார் இதை எனக்குச் சொல்லியவர்.

அகதி முகாம்களுக்குள்ளையும் போய், விட்ட மண்ணைத் திரும்பப் பிடிக்க மீட்புநிதி தரச் சொல்லி நிக்கினமாம். வெளிநாட்டில பிள்ளையள் உள்ளவையை தலைக்கு எழுபத்தைஞ்சாயிரம், போய் பொடியளுக்கு ஃபோனடிச்சு வாங்கிவரச் சொல்லிக் கொழும்புக்கு அனுப்புகினமாம் புலியள்.

இதொருபக்கமிருக்க, பொட்டம்மானும், டொமினிக்கும் சேர்ந்து செய்த நிதி ஊழலுக்காகவே அவைக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறதாய் யாழ்ப்பாணத் தில கதை அடிபடுகுதாம். சுளையாய் ஐம்பது கோடி ரூபாவை வெளிநாட்டுக்கு அவை கடத்தினதாயும், நடுக்கடலில அதைக் கொண்டு போனவரிட்டையிருந்து ஆமி அந்தப் பணப்பொதியைக் கைப்பற்றியதாயும், அதன்பிறகே விஷயம் தெரியவந்து புலித் தலைமை நடவடிக்கை எடுத்ததாய்க் கதை. இது எவ்வளவுதூரம் உண்மையோ எனக்குத் தெரியாது. ஆனால், "இவங்கள் எவனெவனோ எடுத்துக் கொண்டோட, நாங்கள் கண்காணாத் தேசத்தில கஷ்டப்படுற பிள்ளையளைத் திரும்பத் திரும்ப வருத்திக் காசு வாங்கிக் குடுக்க வேண்டியிருக்கே...." எண்டு கொழும்புக்கு வந்திருக்கிறவை குமுறிப் புலம்புறது உண்மை.

கனகாலம் உங்களைச் சந்திக்காமல் விட்டதெல்லே.... செல்லுறதுக்கு நிறையச் சங்கதியள் குவிஞ்சு கிடக்கு. ஆனால், "கனக்க அறுக்காதையும். அதிகமா பேசப் பேச கேக்கிறவைக்கு அலுப்புத்தான் வரும். ஒரு அளவுக்கு மேல உம்மடை புலம்பலை ஆரும் காது குடுத்துக் கேக்க மாட்டினம்" எண்டு ஆசிரியர் என்னை விளங்கிக்கொண்டு எச்சரிச்சு விட்டிருக்கிறார். நானென்ன செய்யட்டும்? ஒருத்தரும் கேக்காத நேரங்களிலதான் எனக்கு அருமையான எண்ணங்களெல் லாம் வருது... கொட்டத்தானே வேணும்?

புதுசாய் ஒரு உண்மையைக் கண்டு பிடிச்சவன்ர வாயும், கப்பம் வாங்கிப் பழகினவன்ர கையும் சும்மா இருக்கா தெண்டது உண்மைதான். கண்ட இடமெல்லாம் யுத்தத்துக்கு நிதி கேட்டுக் கடைசியாய் கடவுளிட்டைப் போயும் கைநீட்டியிருக்கினம் புலியள்.

அரியாலைக் கோயில் ஒன்றின் தர்மகர்த்தாக்கள் அழைக்கப்பட்டு, அவர்களிட்டையிருந்து கோயில் திருத்த வேலையளுக்காக வைச்சிருந்த அஞ்சு லட்ச ரூபாவைப் பிடுங்கியுள்ளனர்.

இதேபோல வல்வெட்டித்துறைக் கோயிலொன்றின் தர்மகர்த்தாக்களிட்டை யிருந்தும் கோயில் கோபுரம் கட்ட வைச்சிருந்த இருபத்தைஞ்சு லட்ச ரூபாவைப் பறித்துள்ளனர். கோயில் கட்ட அந்தக் காசு வேணுமெண்டு சனம் கேட்டதுக்கு, "ஆமி குண்டு போட்டால் கோயிலெல்லாம் அழியிறதுதானே, இப்ப எதுக்கு கோயில் கட்டிடமெல்லாம்?" என்றார்களாம் புலிகள்.


"கோடிக்கணக்கான ரூபா செலவழிச்சுக் கிட்டுவுக்கு மாளிகை கட்டுறியளே, அங்கைமட்டும் குண்டு போடமாட்டாங்களா?" எண்டு திருப்பிக் கேட்டுதாம் வயசான ஒரு பெண்புரசு.

சரி இப்ப காணும். அடுத்தமுறை பாப்பம்!

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் சோதனைச் சாவடிகளால் சூழப்பட்ட ஹவ்லொக் வீதியில் உள்ள ஒழுங்கை ஒன்றில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தாவின் வீட்டினுள் புகுந்தவர்கள் கொலை வெறியாடிவிட்டு, இந்த சாவடிகள் எல்லாம் சாவகாசமாக தாண்டிச் சென்றிருக்கிறார்கள். அப்படியானால் சோதனை என்பது சாதாரண அப்பாவித் தமிழ் இளைஞர்களை முற்றுகையிட்டு, கைது செய்து காசு கறப்பதற்குத்தானா? என தலைநகர் வாழ் தமிழ் மக்கள் அங்கலாய்க்கிறார்கள்.



### அன்ரனோவும் ஐரிஸ்மோனாவும்:

ரஷ்யாவில் புதிதாக வாங்கிய யுத்தமுனைக்குஆட்களையும் சரக்குகளையும் ஏற்றி இறக்கும் விமானம் அன்ரனோவ். 75படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், 3500 அடி ஆழத்திற்குக் கீழே ஜா-எலயிலிருந்து 25 கிலோமீற்றருக்கப்பால்-

ஐரிஸ்மோனா பயணிகள் கப்பல் புலிகளின் கட்டுப்பாட்டில் இருவரைத் தவிர மிகுதிப்பயணிகள் விடுவிப்பு-

இவை இரண்டும் இன்னும் மீட்கப்படவில்லை. அரச யந்திரம் எவ்வளவு சீர்குலைந்து போயுள்ளது, எவ்வளவுதூரம் கட்டுப்பாடுகளை இழந்துள்ளது என்பதற்கு இத்தகைய சம்பவங்கள் எடுத்துக்காட்டு. யுத்தமுனைப்புக்கள் அதிகரிப்பு, நவீன கருவிகளின் அதிகரிப்பு, இத்தகைய நிலைமைகள் நாளாந்தம் ஏற்படவே வழிவகுக்கும். பல விடயங்கள் மீது கட்டுப்பாடு இழக்கப்படலாம்; அராஜகமும் தலைவிரித்தாடலாம். இவற்றிலிருந்து நாட்டை மீட்க ஒரே வழி - அதுதான் மக்களின் விருப்பம்....சமாதானத்திற்கான பாதை.

### மன்னார் தீவில் மீனவர்களின் பாடு பெரும்பாடு:

இலங்கையில் மீன்பிடிக்கு ஒரு அமைச்சு இருக்கலாம். எத்தனையோ மீன்வள அபிவிருத்தித் திட்டங்கள் இருக்கலாம். ஏன் கடன் வழங்கும், நிவாரணம் வழங்கும் திட்டங்கள் கூட இருக்கலாம். ஆனால் இவையெல்லாம் பொதுவாக வடகிழக்கு மாகாண மீனவர்களுக்குப் பொருந்தாது.

மீன்பிடித் தடை உருவாகிய நாளிலிருந்து மன்னார் மீனவர்களின் வாழ்வு பசியும், பட்டினியும், மரணமும் என்றாகிவிட்டது. அரசின் கட்டுப்பாட்டிலிருப்பதாகக் கருதப்படும் இப்பிரதேச மீனவர்கள் நாட்டின்ஏனைய பகுதி மீனவர்கள் போல் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவதில்லை.

பனங்கட்டிகொட்டு, பள்ளிமுனை, வங்காலை மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல முடியாது. ஒருசில இடங்களில் அனுமதியுண்டு. அதுவும் அப்பகுதியிலிருக்கும் பொலிஸ், கடற்படையின் தனிப்பட்ட கடாட்சத்தில் அனுமதிக்கப்படுகிறார்கள், நினைத்தால் நிறுத்திவிடலாம்.



போக்குவரத்துப் பிரச்சினையோடு சேர்ந்த எரிபொருள் பிரச்சினையும் அனுமதி கிடைத்தாலும் மீன்பிடிக்க முடியுமா என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இதேவேளை மன்னார்க் கடலில் இந்திய மீனவர்கள் சாதாரணமாக மீன் பிடிக்கிறார்கள். புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் தொழில் புரியும் மீனவர்களுக்கு கட்டுப்பாடெதுவும் கிடையாது.

ஆனால் சிவில் நிர்வாகம் நடைபெறுவதாக கூறப்படும் மன்னார் தீவில் மீனவர்கள் கடலுக்குச் செல்லத் தடை. ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறுபதம். மன்னார் தீவு மீனவர்களின் பிரச்சினை வடகிழக்கு மீனவர்களின் துன்பங்கள் எத்தகையது என்பதற்கு ஒருசிறு குறிமீடு.

போதாக்குறைக்கு பேசாலை மீனவர்களின் வள்ளங்களும் எரிக்கப்பட்டன, சில மாதங்களுக்கு முன்னர் - வேலியே பயிரை மேய்ந்த கதையாக.

## விடுதலை

விடியாத இரவுக்கு
அழுக்குக் கரத்தால்
வெள்ளை பூசும் கூட்டங்கள்
உடன்பாடு இல்லாமல்
நிரந்தரமாய்
முரண்பட்டுக் கிடக்கின்றன பாவம்!
நித்தம் நித்தம் யுத்த தேவனுக்கு
இரத்த தானமிட்டு
அடிவானத்தில் விடியல் தேடி
நிம்மதியில்லாமல்
காத்துக் கிடந்த அந்த மலர் செடிகள்
இப்போதெல்லாம்
அசிங்கப்படுத்தப்படும் இந்த விடியலை
அருவருப்புடன்தான்
பார்க்கின்றன.

அன்ஸ், மட்டுநகர்.

படிப்பகம்

www.padippakam.com



# என்று வரும தீர்வுத்திட்டம்? என்று மடியும் யுத்தமோகம்?

- தி. சிறீதரன்

தீர்வுத்திட்ட யோசனைகள் பற்றி மயிர் பிளக்கும் விவாதங்கள் ஒருபுறமிருக்க வடக்கு யுத்தத்தில் வெற்றி பெறுவதில் அரசு தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

அழுகின்ற குழந்தைக்கு சில விளையாட்டுப் பொருட்களைக் கொடுத்துவிட்டு தமக்கு முக்கியமெனப்பட்ட காரியங்களில் ஈடுபடும் மனிதர்களைப் போன்றுதான் இந்த அரசும் நடந்து கொள்கிறதா?

இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவதன்மூலம் பேரினவாதிகளைச் சமாதானப்படுத்திவிட இந்த அரசு எண்ணுகிறதா?

## எல்லோரும் ஏறிச் சறுக்கிய குதிரை

1956இல் பண்டாரநாயக்காவும் தனிச் சிங்களச் சட்டத்தை கொண்டு வருவதன் மூலம் அதிகாரத்திற்கு வர முனைந்தார். அதற்கும், தற்போதைய 'யுத்தத்தின்பின் சமாதானத் தீர்வு' என்ற கோஷத்திற்கும் என்ன வித்தியாசமிருக்கப் போகிறது. எல்லோரும் ஏறிச்சறுக்கி விழுந்த குதிரையில் பொதுஜன முன்னணி அரசு, தானும் ஏறிச் சறுக்கிவிழக் கூடாது என்பதே எமது விருப்பம்.

கண்ணுக்குமுன்னே பெருமலையாகக் குந்தியிருக்கும் விடயத்தை காண மறுப்பதே இங்கு பெரும் பிரச்சினையாகும். கடந்த 17–18 வருடங்களாக சாதாரண மக்கள் அலட்சியப்படுத்தப்படுவதே நிலைமை பூதாகரமாவதற்கு முக்கிய காரணம்.

இன்று இந்த நாட்டில் இராணுவத்திற்கும், பொலிசுக்கும் உள்ள சிறப்புச் சலுகைகள், மரியாதை வேறெந்த மனிதருக்கும் இல்லை. வெண்தாமரைஇயக்கம் சமாதானத்தை நிலை நாட்டுவதற்காக என்று சொல்லப்பட்டது, ஆனால் படையினருக்கு நிதி சேர்ப்பதிலேயே குறியாகவும் வெறியாகவும் இருக்கிறது. சமாதானம் என்ற அதன் கோஷம் ஒரு ஏமாற்று முகமூடியாகவே அணியப்பட்டிருக்கிறது.

அதாவது யுத்த யந்திரத்தைப் பலப்படுத்தும், யுத்தக் கட்டமைப்பைப் பலப்படுத்தும் காரியங்களே நடைபெறுகின்றன. அந்தக் கட்டமைப்பு வளர்ச்சியுறுவதற்காக இங்குள்ள மக்கள் எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டும்.

1. அவர்கள் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்ட இருளினுள் வாழ வேண்டும்.

2. எல்லாவிதமான வரிச் சுமைகளையும் ஏற்கவேண்டும்.

3. பத்திரிகை, மற்றும் மக்கள் தொடர்புச் சாதனங்களின் தணிக்கைமுறையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## செய்ய வேண்டியது என்ன?

முதன்மைப்படுத்தப்பட வேண்டிய விடயம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு, அவர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய காத்திரமான தீர்வு.

ஏற்கனவேமுன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகளை அரசியல்சக்திகளுடன் குறிப்பாக தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் கலந்துரையாடுவதும் செழுமைப்படுத்துவதும்–

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் வைத்து, அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் அரசியல் யாப்பு ரீதியான உத்தரவாதத்தை உறுதிப்படுத்துதல்–

உட்பட அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட வேண்டும். சூட்டோடு சூடாக செய்யாவிட்டால் ஆறிய கஞ்சி பழங் கஞ்சி என்ற கதையாகிவிடும்.

ஒருபுறம் இராணுவ யந்திரத்தைப் பலப்படுத்திக்கொண்டு.... யுக்கச் செலவினங்களை அதிகரித்துக் கொண்டு.... மறுபுறம் ஜனநாயக மறுசீரமைப்புச் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருப்பது யாருக்கும் நம்பிக்கையளிப்பதாக இருக்காது.

## யாருடைய ராணுவம்? யாருக்கு ராணுவம்?

இலங்கை இராணுவம் என்பது யாது? அது 99% சிங்கள இளைஞர்களைக் கொண்ட படை.

17, 18 வருடங்களாக தமிழர் பிரச்சினையைக் கிள்ளுக்கீரையாக, தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகப் பார்த்து நடந்து பழக்கப்பட்டது. பெருமளவு யுத்தக் குற்றவாளிகளும் உதிரிகளும் அதில் இருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல கடந்த 17,18 வருடங்களில் 23 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு பதில்கூறக் கடமைப்பட்டது.

இத்தகைய இராணுவத்திற்கு பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் தமிழ் முஸ்லீம் மக்கள் எவ்வாறு விசுவாசமாக இருப்பார்கள்? அதனை எவ்வாறு இந்த நாட்டின் இராணுவமாக – தங்களினதும் இராணுவமாக மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்?

இந்த இராணுவத்திற்கு விசுவாசமாகஇருக்கும்படி சகல இனமக்களையும் அரசு கோர முடியுமா? இந்த இராணுவம் பாரபட்சமில்லாமல் நடக்கும் என்பதற்கான அடிப்படை என்ன?

படையில் இத்தகைய ஒரு பாதகமான வளர்ச்சிப்போக்கு இருக்கும்வரை அதற்கு மறுதலையாக பயங்கரவாதத்தின் வளர்ச்சியும் தவிர்க்க முடியாதது. அதற்கான மக்கள் ஆதரவும் தவிர்க்க முடியாதது.

## வெத்தமுனியும் கத்தரிவெயிலும்

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரரான வெத்தமுனி திருமலையை இலங்கையின் தலைநகரமாக்கி விட்டால் எல்லாம் சரியாகிவிடும்; பாரம்பரிய பூமி என்ற பேச்சுக்கே இடமிருக்காது என்று கூறுகிறார்.

இந்தச் சியோனிச சிந்தனையை அதன் பிதாமகர்களேசரிப்பட்டுவராது என கைவிட்டு வருகையில் வெத்தமுனி இதனைக் கையில் தூக்கியிருப்பதுதான் பரிதாபம்.

எனவே பயங்கரவாதத்தின் வரலாற்றுரீதியான தோற்றுவாய் என்ன, மூலவேராகஇருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வுதான் என்னஎன்பதில் திறந்தமனதுடனான வெளிப்படையான அணுகுமுறை இருக்க வேண்டும்.

தென்னாபிரிக்காவில் வெள்ளையராட்சி, இறுதியில் நேரிடை யாக பிரச்சினைகளை அணுகாதிருந்தால் அல்லது இஸ்ரேலியர்கள் பாலஸ்தீன சுயாட்சிப் பிராந்தியங்களை அங்கீகரிக்காதிருந்தால், அதற்கான நடைமுறைகளில் ஈடுபடாதிருந்தால் இன்றைய முன்னேற்றகரமான நிலை உருவாகி இருக்காது.

'ஒரு இறுதியான யுத்தத்தில் வென்றதன் பின்னர்' என்று தென்னாபிரிக்கா வெள்ளையர்களும், இஸ்ரேலியர்களும் யோசித்திருந்தால் அவர்கள் நிச்சயமாக தற்போதைய சாதனைகளை நிகழ்த்தியிருக்க முடியாது.

## கனவுகண்டு முழித்த கதிர்காமர்

இதற்கிடையே வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் பொருளாதாரத்தடை விதிக்கும் கொடிய மனித உரிமை மீறல் பற்றி ஐ.நா.வில் பேசியுள்ளார். கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக இந்த அநாகரிக நடவடிக்கை தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது அமைச்சருக்கு தெரியாததன் வினோதம் என்ன?



அப்போதுதான் நித்திரை விட்டெழுந்து ஏதோ கனாக் கண்டவர்போல் உலகத்தில் நடக்கும் பொருளாதாரத்தடை நடவடிக்கைகளை விளாசி இருக்கிறார். ஆனால் தமது கொல்லைப்புறத்தில் நடக்கும் சம்பவங்களை வசதியாக மறந்துவிட்டிருக்கிறார்.

உலர்உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகளைத் தவிர வேறெதுவும் அத்தி பூத்தாற் போல்தான் வடபகுதி செல்கின்றன. ஆனால் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் அவர்களோ வடபகுதிக்கு போதிய உணவுப் பொருட்கள் அனுப்பப்படுவதாகவும், அதிலும் 60% இலவசமாக வழங்கப்படுவதாகவும் பேசியிருக்கிறார்.

ஏதோ பிச்சைக்காரர்களுக்கு தனது சொந்தச்சொத்திலிருந்து தானே வழங்குவது போன்ற பெருமிதம்.

வீதியோரங்களிலும், மரநிழல்களிலும் அகதிகளாக மக்கள் பட்டினியோடு வாழ்கிறார்கள். எங்கு இராணுவம் இல்லையோ, அங்கு மக்கள் வாழ்ந்தாலும் அவர்களுக்கு உணவில்லை. இதுவே இன்றைய துரதிர்ஷ்ட நிலை.

ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்லடி கண்ணே என்ற பாணியிலான கதிர்காமரின் அதிகப் பிரசங்கித்தனம் உண்மையில் தமிழ் மக்களின் நெஞ்சைப் புண்படுத்தும்.

இனிமேலாவது ஆத்தை கிண்ணிப் பிச்சை எடுக்க தம்பி கும்பகோணத்தில் கோதானம் பண்ணுகிற மாதிரி.... பகட்டான, போலியான, டாம்பீகமான பேச்சுக்களை கதிர்காமர் நிறுத்த வேண்டும் என்பது எங்கள் பெருவிருப்பு.

# 'பெருசு'களின் ராஜ்ஜியத்தில் உய்யலாமா?

வவுனியாவிலிருந்து க. செல்வநாயகம்

புலிகள் முன்னர் பணம் சேர்ப்பதற்கு அந்தந்தப் பகுதி நிதிப் பொறுப்பாளர்களைப் பயன்படுத்தி வந்தனர். இப்போது நடந்துவரும் 1000கோடி ரூபா சேர்ப்புத் திட்டத்திற்கு பணம் சேர்ப்பதற்கான ஓர் குழு முழுநேரமாக வடக்கில் சுற்றுலா நடத்துகிறதாம். முரசுமோட்டை, ராமநாதபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி முடிந்து இப்போ எட்டாம் வாய்க்காலில் முகாமிட்டிருக்கிறார்களாம். அதுசரி, பிரதேச நிதிப்பொறுப்பாளரை ஏன் பயன்படுத்தவில்லை? ஒருவேளை அவர்கள் டிசிப்பிளின் மெத்தி, தலைவரிட்டை இருந்தாலென்ன என்னட்ட இருந்தாலென்ன ஒண்டு தானே என நினைக்கத் தொடங்கி விட்டதாலோ? அல்லது பொட்டம்மான், டொமினிக்கிடம் பெற்ற பாடமோ? என வன்னி மக்கள் குசுகுசுக்கின்றனர்.

உரம், கிருமிநாசினி தடையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விவசாயம் செய்ய முடியாமல் மக்கள் படும் அவலம் தெரிந்ததே. கிடைக்கும் சொற்ப உரமும் புலிகட்கு 10 மடங்கு விலை செலுத்தியே பெற வேண்டிய நிலை இருந்தது. விளையும் நெல்லை புலிகள் தவிர வேறு யாருக்கும் விற்கக் கூடாது. விளைந்ததை புலிகள் உடன் வாங்குவார்களா என்றால் தெரியாது. அவர்கட்குத் தேவைப்படும்போது வாங்குவார்கள். அவர்கள் விரும்பும்போது பணம் கொடுப்பார்கள். அதனை கட்டிவைக்க சாக்குக்கும் வழியில்லை. பாதுகாப்பாக கொட்டிவைக்க இடப்பிரச்சினை. புலிகள் வாங்குவதற்குள் எலியும் அணிலும், கோழியும் தின்றது போக மழைக்கு முளைகட்டி மொத்தமும் நாசமாகி போகின்றதாம். தங்களது தமிழீழ பொருளாதார ஆய்வுக்குழுவுக்கு மக்களைக் கொள்ளையடித்து, ஆயிரம் வசதிகளை புலிகள் எதற்குச் செய்கிறார்கள்? எல்லா உழைப்புக்களையும் கொட்டி விளைவிக்கும் கொஞ்சநஞ்ச நெல்மூலமே வருமானம் பெறுவதை தடைசெய்து, யாருக்கும் பயனின்றி அழிக்கும் இவர்களுக்கு பொருளாதாரத்தைப் பற்றிப் பேச என் அருகதை இருக்கிறது என அவர்களின் எல்லைக்கு வெளியே இங்குள்ள மக்கள் ஆக்ரோசப்படுகின்றனர்.

உரம், கிருமிநாசினிக்கு அரசின் தடை ஒருபுறம், அதைமீறி உற்பத்தி செய்யும் கொஞ்சநஞ்ச விளைச்சலையும் புலிகளுக்கு தாரைவார்க்க வேண்டிய நிலமை மறுபுறம் என சனம் களைச்சுப்போய் வயலுக்குப் போகிறதையெல்லாம் விட்டுட்டு முடிஞ்சவரைக்கும் கிழடு கட்டைகள் கூட வெளியே ஓடிக்கொண்டிருக்கு. வயல்கள் எல்லாம் யானைக் கோரைக்கும், கொடிய நச்சுப் பாம்புகளுக்கும் விளைநிலமாகிவிட்டது. கீழே பாம்பின் விசம், மேலே சயனைட் விசம் என தமிழீழத்தில் விச அபிவிருத்திதான் நடக்கிறது. தேங்காய் எண்ணெயைக் காய்ச்சி மண்ணெண்ணையில் கலந்து வாகனத்திற்குப் பயன்படுத்துகிற மாதிரி இவங்கட தமிழீழ பொருளாதார மேம்பாட்டுக்கழகம் பாம்பு விசத்தையும் சயனைட்டையும் கலந்து ஏதும் கிருமிநாசினி கண்டுபிடிக்கிறதைப்பற்றி யோசிக்கலாமே என வேதனையுடன் கிண்டலடித்தார் வவுனியா வந்த ஒரு விவசாயி.

மணலாற்றில் புலிகளின் மிகப்பெரும் இழப்பிற்குப் பிறகு இறந்தவர்களின் பெற்றோருக்கு அறிவிப்பதைப் புலிகள் நிறுத்திவிட்டார்களாம். இத்தனை பேர் மாவீரர்களானார்கள் என்பதை மட்டும் பொதுவாக அறிவிப்பதுடன் சரி. இறந்தவர்களின் பெயர், விலாசங்கள் அறிவிக்கப்படுவதில்லை. மணலாற்றில் இறந்த புலிகளின், ஒருசிலருடைய பெற்றோர் இறந்த தமது பிள்ளைகளுக்கு நெருக்கமான புலிகளுக்கூடாக இரகசியமாக அறிந்ததிலிருந்து இக்கதைகள் ஊருக்குள் பரவி, பிள்ளைகள் புலியிலிருக்கும் பெற்றோர் கோபமடைந்திருக்கிறார்கள். வாழத்தான் விடவில்லை. மரணச்சடங்கையாவது செய்யமுடியாமற் செய்து விட்டார்களே பாவிகள் என்று புலம்புகின்றனர்.

புலிகளின் ஆட்சேர்ப்பு முயற்சிகளுக்கு மக்களின் மறைமுக எதிர்ப்பு வலுத்துவருகிறது. 9–12 வயது அறியாப் பருவப் பிள்ளைகள் தவிர ஓரளவு விசயம் தெரிந்த மாணவர்கள் சேர்கிறார்களில்லை என்பது புலிகளின் கோபம். பாடசாலையில் ஆட்சேர்ப்பு வகுப்பு வைப்பதாகக் கூறி மாணவர்களைப் பார்த்து "உங்களுக்கு ரோசமில்லையா? நீங்கள் எல்லாம் அடிமைகளாகச் சாகப்போகிறீர்களா? உங்களுக்கு சொரணை இல்லையா?" என கடுமையான வார்த்தைகளில் புலிகளின் அரசியல் விளக்கம். மாணவர்கள் அவர்களின் முகத்தைப் பார்க்காமல் தலைகுனிந்தவாறே இருக்கின்றனர். சரி, சேரவிரும்புவோர் பெயர்களைத் தரலாம் என்றாலும் எவரும் தலைநிமிர்வதில்லையாம். நீங்கள் எல்லாம் தெருவழியதான் செத்துக் கிடப்பீர்கள்... அடிமைப்புத்தி மாறாது... என வாழ்த்திவிட்டுச் செல்கின்றனராம் புலிகள். இந்த வகுப்பில் கலந்துகொண்ட ஒரு மாணவன் இதையெல்லாம் சொல்லிவிட்டுச் சொன்னான்: "இவங்களுக்கு கீழே இருக்கிறதை விட அடிமைத்தனம் வேறையொண்டு உலகத்திலை இருக்காண்ணே...? எங்களைச் சொரணையற்றவர்களாக்கியது இவங்கள்தானே அண்ணை...."

படிப்பகம்

www.padippakam.com



# வீம்புக்குச் சண்டையை நடத்துபவர்களே அழிவுகளுக்கும் பதில் சொல்ல வேண்டும்

# மக்களின் இழப்புகளைக் குறைக்க விரும்பின் மார்க்கத்தைப் புலிகளே கண்டறிய வேண்டும்



சாணக்கியன்

**யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சியில் அரசாங்கம்**

ஜூலை 9ம் திகதி தொடங்கிய "முன்னேற்றப் பாய்ச்சல்" இராணுவ நடவடிக்கையானது ஜூலை 16ம் திகதியுடன் ஒரு முடிவிற்கு வந்தது. முழு குடாநாட்டையும் கைப்பற்றுவது என்றநோக்கில்ஆரம்பிக்கப்பட்ட அம் முன்னேற்றப்பாய்ச்சல் நடவடிக்கையானது புலிகளின் "புலிப்பாய்ச்சலினால்" பின்னேற்ற நடவடிக்கையாக மாறியது.

அதன் பின்னர் இரண்டாவது இராணுவ நடவடிக்கைக்கான முழுத் தயாரிப்புக்களும் நடைபெற்றுவந்தன. இதை அறிந்து புலிகளும் இவ் இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்வதற்கான தயாரிப்பு வேலைகளைச் செய்து வந்தார்கள். கிழக்கிலும், தென்பகுதியின் ஏனைய பிரதேசங்களிலிருந்தும் ஏறத்தாழ 30,000 இராணுவத்தினர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யாழ் குடாநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நம்பகமாக தெரியவருகின்றது. இவர்களையும் ஏற்கனவே அங்கு நிலைகொண்டிருந்தவர்களையும் கொண்டு "இடிமுழக்கம்" என்ற இராணுவ நடவடிக்கை அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒக்டோபர் மாதம் 1ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இத்தாக்குதல் மூலம் புன்னாலைக்கட்டுவன், நவக்கிரி, புத்தூர், அச்சுவேலி, இடைக்காடு, சிறுப்பிட்டி போன்ற பிரதேசங்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக இராணுவம் கூறுகின்றது. அத்துடன் இந்த இராணுவ நடவடிக்கையானது தொடர்ந்து நடைபெறும் எனவும் பாதுகாப்பு அமைச்சர் மீண்டும் மீண்டும் கூறிவருகின்றார்.

கிழக்கு மற்றும் தென்பகுதியிலிருந்து இராணுவத்தினரை நகர்த்தியதானது, யாழ்ப்பாணத்தை எப்படியாவது தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்ற அரசாங்கத்தின் முயற்சியை தெளிவாக்குகின்றது.

ஒக்டோபர் மாதம் 1ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த இடிமுழக்கத் தாக்குதலில் புலிகள் மிகவும் பாரிய இழப்புக்களைச் சந்தித்துள்ளார்கள். வெலிஓயாவில் 200இற்கு மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டும், அதிலும்விட இருமடங்கினர் காயப்பட்டும் மிகவும் பாரிய பின்னடைவைச் சந்தித்திருந்த புலிகள், இடிமுழக்கத் தாக்குதலில் மீண்டும் 200இற்கு மேற்பட்ட தமது உறுப்பினரைப் பலிகொடுத்தும் அதிலும் விட பலமடங்கு உறுப்பினர்கள் காயமடைந்தும் உள்ளதானது புலிகளுக்கு மிகவும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

யாழ்குடாநாட்டை கைப்பற்றுவதன் மூலமே புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்க முடியும் என அரசாங்கம் நம்புவதுடன், யாழ் குடாநாட்டில் புலிகள் உருவாக்கி நடாத்திவந்த பல்வேறுபட்ட நிர்வாக வடிவங்களும் இதன்மூலம் சிதறடிக்கப்படும் என்பதும் உண்மை. இதுவரை நடைபெற்ற இடிமுழக்க இராணுவ நடவடிக்கையூடாக அச்சுவேலியையும் புத்தூரையும் கைப்பற்றியதன் மூலம் வடமராட்சிக்கும் யாழ் நகருக்குமான தொடர்ச்சி துண்டாடப்பட்டுள்ளதுடன் வடமராட்சி மக்கள் யாழ்ப்பாணம் போவதெனில் நெல்லியடியூடாக கொடிகாமம் சாவகச்சேரி வழியாகவே யாழ்ப்பாணம் செல்ல வேண்டியுள்ளது. இதன்மூலம் குடாநாட்டு மக்கள் இன்னும் பாரிய கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

**யாரும் வெல்ல முடியாத யுத்தத்தில் மக்களுக்கு எதற்கிந்த இன்னல்?**

புத்தூரில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின்செல் வீச்சுக்களால் நீர்வேலி கோப்பாய் மக்களும்கூட இடம்பெயர்ந்து வருவதாக அறியப்படுகின்றது. இராணுவத்தினர் அடுத்த கட்டமாக யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி வழியாகவும், நிலாவரை இராசபாதை வீதி வழியாகவும், புன்னாலைக்கட்டுவன் யாழ்ப்பாண வீதிவழியாகவும் யாழ்நகரை நோக்கி முன்னேறமுடியும்.

இராணுவ நடவடிக்கைகளால் ஏற்கனவே இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துவிட்டார்கள். இது தொடரும்பட்சத்தில் முழுக் குடாநாட்டு மக்களுமே கிளிநொச்சி வவுனியா போன்ற இடங்களுக்கு இடம்பெயர வேண்டி ஏற்படலாம். ஏற்கனவே புலிகளின் யாழ் குடாநாட்டிலிருந்த பல்வேறுபட்ட அரசியல், இராணுவ முகாம்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு வருவதாக நம்பகமாக அறியப்படுகின்றது.



ஒரு கெரில்லா இயக்கமாகிய புலிகளுக்கு முழுக் குடாநாட்டையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக் கூடிய வகையில், ஒரு நிரந்தர இராணுவத்தை எதிர்த்து நின்று தமது பிரதேசங்களைப் பாதுகாத்து நிற்பது என்பது கடினமானதே. ஆனையிறவுத் தாக்குதல், பூநகரி இராணுவ முகாம் தாக்குதல்போன்ற காலகட்டங்களில், தாம் நிரந்தர இராணுவப் படையாக வளர்ந்துவிட்டதாக தமது உத்தியோகபூர்வ பத்திரிகைகளில் எழுதிவந்தார்கள். ஆனால் பெருமளவிலான ஒரு இராணுவப் படையெடுப்பை எதிர்கொள்வது கடினம் என்பதையே புலிகளின் கடந்தகாலத் தோல்விகள் நிரூபித்து நிற்கின்றன.

**அரசின் இராணுவ நடவடிக்கைகள் தொடரும்**

புலிகள்பெரும்நிலப்பரப்பாகிய கிளிநொச்சி, முல்லைத்தீவுப்பகுதிகளுக்கு நகர்ந்து தமது கெரில்லாத் தாக்குதல்களைத் தொடர்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதற்கு முன்னர் யாழ் நகரைக் கைப்பற்றும் போராட்டத்தில் இருபகுதியினருக்கும் மாத்திரம் அல்லாமல் பொது மக்களுக்கும் பலத்த இழப்புக்கள் ஏற்படலாம்.

யாழ் நகரிலிருந்து இரண்டு கிலோமீற்றருக்குள் உள்ள மண்டைதீவிலும் இராணுவம் உசார்நிலையில் உள்ளது. தற்பொழுது யாழ் குடாநாடு இரண்டு பகுதிகளாக ஊடறுக்கப்பட்டு இரண்டு பகுதியுமே இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்ட ஓர் சூழ்நிலையில் உள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மண்டைதீவு, மாதகல், பலாலி, புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, புத்தூர் போன்ற பகுதிகளாலும் மறுபுறத்தில் வெற்றிலைக்கேணி கட்டைக்காடு, ஆனையிறவு போன்ற பகுதிகளாலும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் புலிகளின் எதிர்ப்பு குறையும்பட்சத்தில் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு இராணுவம் முழுமையாக முயற்சி செய்யும் என்று நம்பலாம்.

மேலே ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இருந்த கிழக்கு மாகாணத்தை விட்டுக்கொடுத்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இராணுவத்தினர் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டால், இடைவெளிகள் ஏற்பட்டாலும் அரசின் இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்பது தெளிவாகின்றது.

**விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் கடற் புலிகளும்**

குடாநாட்டில் இராணுவத்தின் முன்னேற்றத்தை முறியடிக்க வேண்டுமாயின் அவர்களது போக்குவரத்து விநியோகப்பாதைகளை தடைசெய்ய வேண்டிய தேவை புலிகளுக்குள்ளது. கடல் ஆகாய மார்க்கப் பாதைகளை மாத்திரமே அரசபடைகள் உபயோகிக்கக்கூடிய சூழ்நிலைகள் உள்ளன.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள், பயிற்றப்பட்ட கடற்புலிகள் போன்றவற்றை புலிகள் கொண்டுள்ளார்கள் என இருந்தாலும்கூட விமான எதிர்ப்பு ஏவுகணைகள் அவர்களிடம் இன்னும் இருக்கின்றதா, இல்லையேல் முடிந்துவிட்டதா? என்பதுவும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

அதைப்போலவே, புலிகளின் தற்கொலைக் கடற்தாக்குதல்களையும் ஓரளவிற்காவது எதிர்கொள்ளக்கூடிய சூழ்நிலைக்கு சிறிலங்கா கடற்படையும் தன்னைத் தயார் செய்து கொண்டுள்ளதாகவே தோன்றுகின்றது.

நேருக்குநேர் நின்று போர்புரிவதைவிட போக்குவரத்து விநியோகப் பாதைகளைத் தடைசெய்யவே புலிகள் விரும்புவார்கள் என்பதே உண்மை. ஆனால் அந்த ஆற்றலையும் எதிர்கொள்ள இராணுவம் தன்னைத் தயார்படுத்தி வருவதையும் காணமுடிகின்றது.

**மக்களை மடியவிட்டு புலிகள் பின்வாங்குவார்களா?**

மொத்தத்தில் இன்றைய இராணுவநடவடிக்கைகள் தொடரும்பட்சத்தில் சிறிது காலதாமதமானாலும் கூட இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தின் ஒருபகுதியையாவது கைப்பற்றும்சூழ்நிலை தோன்றுவதுடன், புலிகளின் கடந்த ஐந்து வருடகால பொலிஸ், நிரந்தர இராணுவம், நீதி, நிர்வாகம் போன்றவை யாவும்சிதறடிக்கப்பட்டு மீண்டும் சிறிய குழுக்களைக் கொண்ட கெரில்லா இயக்கமாக இவர்கள் பின்வாங்க வேண்டி ஏற்படலாம்.

இத்தகைய பின்னடைவுகள் ஏற்படும் பட்சத்தில் அதனைச் சரிக்கட்ட, அப்பாவிச் சிங்கள, முஸ்லிம்மக்களைக் கொன்றொழிக்கும் வழிமுறையை புலிகள் நாடுவர் என்பதும் கடந்த கால அனுபவமாகும். எதிர்காலத்தில் வழமை போல, இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில்– மக்கள் செறிவாகவாழும் பகுதிகளில் படையினர் மீது மறைந்திருந்து தாக்குவதன்மூலம் அப்பாவிப் பொதுமக்களை இராணுவத்திற்குப் பலியாக்கும் போக்கும் தொடரலாம்.

மொத்தத்தில் இக்காலகட்டத்தில் பெருமளவு அப்பாவிமக்கள் பலியாகும்நிலை உருவாகவே இப் போரின் போக்கு வழிவகுக்கும்.

7

படிப்பகம்




## சமாதானத்திற்காக ஏறுகிறது பாணின் விலை

மாதானத்திற்காக யுத்தம் தேவைப்படுகிறது. யுத்தத்திற்காக யுதங்கள் தேவைப்படுகிறது. ஆயுதங்களுக்காக அன் ாடப் பொருட்களின் விலைகளைக் கூட்ட வேண்டியுள் து. இப்படிப் பாதுகாப்புச்செலவால் பாணின் விலை யயும் இரவோடு இரவாக அதிகரிக்க வேண்டியுள் து. இப்படி யுத்தத்தைக் காரணம் காட்டும் செயலை ட யுத்தத்திற்கு கொடுக்கப்படும் பெயர்களும் அதி ரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. சிங்கள மக் ளிடம் – பிரிவினைக்கு எதிரான யுத்தம், அறிவுஜீவி ளிடம் – அமைதிக்கான யுத்தம், அருட்டல் உணர் ள்ள மனிதர்களுக்கு – ஐக்கியத்துக்கான யுத்தம், ாம் செய்வதைப் புரிந்துகொள்ள முடியாத தமிழ்க் ட்சிகளுக்கு – அதிகாரப் பகிர்வுக்கான யுத்தம், விடு லைப்புலிகளுக்கு – யுத்தத்திற்கு எதிரான யுத்தம்.... ப்படிப் போகிறது யுத்தத்திற்கான அர்த்தங்கள். தமிழ் க்களுக்கு எதிரான யுத்தம் என்று ஆட்சியாளர்கள் எவ ும் சொல்லவில்லை. அதையும் சொல்லிவிட்டால் கிட்டத் ட்ட யுத்தத்திற்கு எல்லாப் பெயர்களும் கிடைத்தமாதிரித்தான். ரலாற்றில் தத்துவ ரீதியான யுத்தத்திற்கான அர்த்தத்தை ப்படியும் கொடுக்கலாம். "இரு நபர்கள் அல்லது இரு க்திகளுக்கிடையில் யதார்த்தத்தில் இருக்கக்கூடிய சுமுகமான றவு. மாறாக அமைதி, சமாதானம், ஒற்றுமை என்று தைப்பதெல்லாம் எதிர்ப்புரட்சி சக்திகளின் சமாச்சாரம்"

## ஆளுங் கதிரை ஞானோதயம்

அமைதிக்கும் அபிவிருத்திக்கும் நாட்டில் எதிர்க்கட்சிகளின் ங்கு முக்கியமானது. ஆனால், நமக்கு மாறி மாறி எதிர்க்கட்சி ளாய் இருந்தவர்கள் செய்த துரோகத்தனங்களும் இந்த லைமைக்கு காரணமுமாய் இருக்கிறது. ஆட்சிக்கு வந்தவை, மிழ்மக்களுக்கு ஏதாவது தீர்வைக் கொண்டுவந்தால் அதை திர்ப்பதிலும் கிழிப்பதிலும் எதிர்க்கட்சி முன்னுக்கு நிற்கும்.



அண்மையில் அமைச்சர் கிங்ஸ்லி பிக்கிரமரட்ண, "மாகாணசபை ளைக் கொண்டுவந்தபோது, நாம் அரச மரங்களின் கீழ் அமர்ந்து நாட்டைப் பிரிக்கிறார்கள்' என்று கோஷமிட்டோம். எதிர்க்கட்சியில் இருக்கும்போது உண்மையில் இவை விளங்குவதில்லை. 'கோஷ மிடுவதற்கு மட்டுமே தெரிகிறது.." என்று சுடலை விளங்கிச் சொல் கிறார். மனந்திறந்து சொல்லுவத னால் தமிழ் மக்களுக்கு ஏதாவது செய்யமுயற்சிப்பார் என எதிர்பார்க்கலாம். ஆனால் பௌத்த த்துவத்தின் வழிவந்த, மக்களுக்கு எல்லாளனை நினைத்துக் கொண்டு வரலாற்றை சொல்லிக் கொடுத்தவர்கள், உண்மை யான பௌத்தனாய் மாற வழி இதுதான். விட்ட தவறுகளுக்கு பரிகாரம் தேடுவதை விட்டுவிட்டு சிங்கள தேசபக்தியில் ஊற்றுபவர்களுக்கு, அமைச்சர் இன்னொரு இடத்தில் கூறியதை ஞாபகப்படுத்தலாம். "வரலாற்றைப் பார்த்தவுடன் துட்டகைமு னுவும் யானையுமே எமக்கு நினைவுக்கு வரும். துட்டகைமுனு யானை மீது ஏறி வரும்போது புலிகள் நவீன ஏவுகணையால் அடிப்பார்கள்".

## வீம்புக்குச் சண்டையை....

(6ம் பக்கக் கட்டுரையின் இறுதிப் பகுதி)

இக்கட்டுரையை எழுதியதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா இராணுவம் "சூரிய வெளிச்சம்" என்னும் இன் னுமோர் தாக்குதலையும் ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பா ணத்தைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இத் தாக்குதலில் நூற்றுக்கணக்கான புலிகளும் இராணுவத்தினரும் கொல்லபட்டதுடன் பல ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகவும் சென்றுள்ளனர். நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக கிளிநொச்சி நோக்கிச் சென் றுள்ளதாக அறியப்படுகின்றது. பலாலியிலிருந்து புறப்பட்ட இராணுவம் புன்னாலைக்கட்டுவன், அச்செழு போன்ற பகுதிகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள் ளதாகவும் அறியப்படுகின்றது. இராணுவத்தின் தொடர்ச்சி யான தாக்குதலால் புலிகளும், தாம் யாழ் நகரிலிருந்து பின்வாங்க நேரலாம் என்றும், மக்கள் தம்மைத்தாமே பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறிவருவதாக அறியப்படுகின்றது. யாழ் தாக்குதலை திசைதிருப்பும் முக மாக கொழும்பு நகரில் பாரிய தாக்குதல்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளதுடன் வடகிழக்கில் அப்பாவி சிங்கள மக்களும் புலிகளால் கொல்லப்பட்டு வருகின்றனர். அக்டோபர் 20 திகதி பதவியா, வெலிக்கந்தை, அம்பாறை போன்ற இடங் களில் 65இற்கும் மேற்பட்ட சிங்கள சிவிலியன்களும் புலி களால் கொல்லப்பட்டுள்ளார்கள்.

- சாணக்கியன்

## போகும் உயிர் போவதுதான் போவதற்குள் பையை நிரப்பு

புலிகளின் இரர்ஜினாமா மிரட்டலில் அரண்டுபோய் ஆளுங் கட்சி தமிழ் அமைப்பாளர்கள் விலகிக் கொண்டிருக்கும் நேரத்தில், கிழக்கில் இன்னொரு ஆளுங்கட்சி தமிழ் அமைப் பாளர் ஒருவர் தீவிரமான வேலையொன்றில் இறங்கியிருக் கிறார். 5000ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்பும் அரசின் அறிவித்தலின் பின் அட்வான்ஸ் ரூபாய் 5000, வேலை கிடைத்த பின் ரூபாய் 15,000 என இப்பகுதி இளைஞர்களி டமும், யுவதிகளிடமும் கறந்து கொண்டிருக்கிறார். (இவர் சமுர்த்தி திட்ட வேலைவாய்ப்பு என்றும் ஏதேதோ சொல்லி ஏற்கனவே நிறைய அள்ளி விட்டாராம்). 'பிள்ளை'யாரைப் பிடிக்கப்போய் குரங்கைப் பிடித்த கதையாகிவிடக் கூடாது நம் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும்.

## புலி எங்கே போகிறது?

"எங்களோடு வந்து சேராவிட்டால், இப்படித்தான் நீங்கள் வீணாக அழிவீர்கள்...." – இது, படையினரின் தாக்குதலால் இறந்த மக்களைக் காட்டி புலிகள் இன்று செய்யும் ஆட்சேர்ப் புப் பிரச்சாரம்.

பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயில் திருவிழாவுக்கு அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தமிழ் மக்கள் பெருந்திரளாக வருவது வழக்கம். இதையொட்டி, கோயில் நிர்வாகத்தினர் பாதுகாப்பு பொறுப்புகளுக்காக பொலிஸ் மற்றும் இராணு வத்தினரைக் கோரியபோது அவர்கள் மறுத்துவிட்டனர். அதற்கு அவர்கள் கூறிய காரணம், "பாதுகாப்பு வழங்குவதில் எமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அங்கு புலிகள் வரு வார்களாயின், எமக்கும் அவர்களுக்கும் பிரச்சினை வரலாம். இதனால் கோயிலுக்குவரும் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக் கப்படுவர். எனவே வேண்டாம்" என்பதாகும்.

இதொருபுறமிருக்க, அக் கோயில் உண்டியல் பணத்தில் பாதியை புலிகள் எடுத்துள்ளனர். இறைவன் விண்ணையும் மண்ணையும் ஆள்பவனாக இருக்கலாம். வட–கிழக்கு மண் ணுக்கு வந்துவிட்டால் மண்மீட்பு நிதி தந்துதானாக வேண்டும்.

## 'அறை' வாங்க நேரினும் அமைதி பேசு

முஸ்லிம் தமிழ் எல்லைப்புறக் கிராமம் ஒன்றிலிருந்து வந்த நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கும்போது ஐக்கியம் என்றவுடன் கொஞ்சம் சூடாகிப் போனார். அரசின் கைங்கரி யத்தில் நம்பிக்கையில்லையோ என்று நினைத்து கொஞ்சம் நிலமையை விளககிச் சொல்ல (தொழிலே ஆதுதானே) முயற்சித்தேன். ஆள் அறுவைக்குத் தயாரில்லையோ என்ன வோ, ஆனால் நொந்துபோய் சொன்னார்: "சமாதானம், ஐக் கியம் பற்றியெல்லாம் தலைவர்களுக்கும் மக்களுக்கும் பிரச்சி னையில்லை. முதலில் இந்த கூட்டங்களையெல்லாம் நம்ம பகுதி 'ஊர்காவல் படைக்கு' போடுங்கள்..." 'அறை'களாலும் 'அடி'களாலுமே பதில் சொல்லும் ஊர்காவல்படைக்கு என ஒரு கூட்டத்தையாவது ஒழுங்குபண்ண ரொம்ப ஆசையாகத் தான் இருக்கிறது. அதையும் 'அறை'யை வேண்டிக் கொண்டு தான் முன்னால் நின்று சொல்லவேணும் என்பதுதான் கொஞ்சம் சிக்கலான விடயம்.

## அவசரகால விதிப்படி–"படி"

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் போராட்டங்களின் எதி ரொலி மட்டக்களப்பில் அவசரகாலச் சட்ட விதிகளின் சுற்ற றிக்கையாக பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் உலாவரு கிறது. பொலிஸ் பகுதியினரால் எல்லாப் பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில், 'ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் எதனையும் நடத்த முடியாது. பாடசாலை மாணவர்கள் ஊர்வலம், ஆர்ப்பாட்டங்கள் செய்தால் பாட சாலை அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். அதிபரையும் மீறி ஆர்ப்பாட்டங்கள் நடந்தால் பாடசாலை இழுத்து மூட வேண்டிவரும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருசிலர் பம்மாத்துக்கு கத்தினால் ஒன்றும் நடக்கப்போவதில் லைதான், என்றாலும் நம்மூர் எம்.பி.க்கள் இந்த அவசரகால வாக்கெடுப்புக்களில் எல்லாம் 'தேவை'என்று சேர்ந்து கையு யர்த்தட்டும் அல்லது ஒன்றுமே சொல்லாமல் நழுவிவிடட்டும். அவர்களது உரிமையில் கைவைக்க நமக்கேன் வம்பு.

## ஆண்ட பரம்பரை ஆள நினைப்பதில் என்ன குறை?

புலிகள் சிங்களக் கிராமங்களில் புகுந்து மறுபடியும் வெட்டிப் போட்டிருக்கிறார்கள். ஏன் செய்தார்கள்? இது எப்படிப்பட்ட குரூரம்? என்பதையெல்லாம் விட்டுவிட்டு, இதனால் திகைப்படைந்திருக்கக்கூடிய புலிசார் புத்திஜீவித் தமிழர்களை நினைத்துப் பார்க் கிறேன்.. தாங்கள் கொல்வது எதிரிப் படையை மட் டுமல்ல என்பதை புலிகள் உணர்த்துகிற ஒவ்வொரு தடவையும் ஒரு கணம் நெஞ்சு விறைத்து, உடனேயே சமாளித்துக்கொண்டு, 'அவர்கள்தான் கொன்றார்கள் என்பதை நிரூபிக்க முடியாதபோது, அவர்களைக் குற்றஞ்சாட்டிப் பேசுவது அரசின் அடிவருடிகளது வேலைதான்' என்று தம்மிடமுள்ள அசிங்கத்தைக் கக்கும் புலியுறை நெஞ்சுகள் பலவற்றை எல்லோரும் அறிவோம். அரசியல் தலைவர்கள் ஆசிரியர்கள், பொதுநலன் விரும்பும் பிரமுகர்கள், கலைஞர்கள் என்று இவ்வாறான தனிநபர்கள் கொல்லப்படுகிறபோது, "புலிகள் கொன்றிருக்கலாம்தான்.... ஆனாலும் வேறு சாத்தியங்களும் இருக்கிறது என்பதால் கொலை செய்ய வந்தவர்களைக் கையுங்களவுமாகப் பிடிக்கா மல் அபிப்பிராயம் சொல்லப்படுவதை நம்ப முடியாது. இத்த கைய பழிபோடல்கள் தேசிய விடுதலைப் போரை நடத்திக் கொண்டிருப்பவர்களைக் கொச்சைப்படுத்துவதாகும்...." என்று வழவழா கொழகொழாவாகச் சுத்துமாத்துப் பண்ணிக்கொண் டிருக்கிற புலிசார் தமிழ் நெஞ்சுகள், கிராமங் கிராமமாக அப்பாவிச் சிங்கள ஏழை மக்கள் பெண்கள், குழந்தைகள் உட்பட வெட்டிக் கொல்லப்படுகிறபோது கொஞ்சம் தடுமாறிப் போகிறார்கள். பிறகு சமாளித்துக்கொள்கிற இவர்கள், "இது கண்டிக்கப்பட வேண்டியதுதான்" என்று அதை ஒரு சம்பவம் என்ற அளவில் பெரிய மனது பண்ணி ஒப்புக் கொள்கிறார்கள். அதன்பின், அரச படையின் தாக்குதல் நடக்கும், அதை எதிர்த்துத் தமிழ் வீரமுடன் புலிகள் நடத்தும் தேசிய விடுத லைப் போருக்கு வாழ்த்துப்பாடப் போய்விடுவார்கள்.

இங்ஙனமாக இன்றைய தமிழனின் வீரமும் சோழ, பாண்டி யர்களின் வீரத்திற்குச் சிறிதும் சளைத்துவிடாமல் சரித்திரம் படைக்கிறது. எதிரி நாட்டுக்குள் புகுந்து தலைசீவிக் குடிமனை எரிக்கும் பொற்கால வரலாறாகிறது. கங்கை கொண்டான், கடாரம் வென்றான், கனகவிசயரின் முடி நெரித்துக் கல் எடுத்தான் என்பதுபோல, தமிழன்னை மானங்காக்க சிங்க ளரை வெட்டிக் குவித்தான் என்று எதிர்காலச் சந்ததி இறும்பூதெய்தப் போகிறது.

அட, யாரது, சிங்கள அரசாங்கத்தோடு பேசி சுமுகமாக வாழும் தீர்வைக் கொண்டுவருவது பற்றிக் கதைப்பவன்? தமிழ்த் துரோகி. அவனையும் மண்டையில் போடு. வெற்றி வேல்! வீரவேல்!

## ஊக்குவிப்புப் படியும் மண்மீட்பு நிதியும்

பயங்கரவாதம் நிலவுகின்ற பிரதேசங்களில் அரசின் சிவில் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு ஊக்குவிப்புப் படியாக மாதாந்த சம்பளத்தில் 25 வீதத்தை மேலதிகமாகக் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது. பணியாளர்களில் அக்க றையுள்ள அரசைப் பாராட்டத்தான் வேண்டும். ஆனால், இதற்கான அரச பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வடக்கு கிழக்கின் பல்வேறு திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றுநிருபத்தில் பயங்கரவாதத்தின் கோரப்பிடிக் கஷ்டங்களுக்கு மத்தியில் செயற்படும் பிரதேச செயலகப் பகுதிகள் பட்டியலில் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என நான்கு மாவட்டங்களையுமே முற்றுமுழு தாகக் காணோம். இப்படி வவுனியாவில் மூன்றும், திருமலை யில் மூன்றும், மட்டக்களப்பில் நான்குமாக பிரதேச செயல கப்பகுதிகள் பட்டியலில் வெட்டப்பட்டுள்ளன. இதன்படி, புலிகளின் பிடிக்குள் உள்ள பிரதேசங்கள், பயங்கரவாதம் நிலவுகின்ற பகுதிகளாக அரசினால் கணிக்கப்படவில்லை.

மட்டக்களப்பில், அரசஇராணுவ பொலிஸ் படையினர் முகாம் கள் எதுவுமற்ற வவுணதீவு, பட்டிப்பளை, வெல்லாவெளி, வாகரை என்ற நான்கு பிரதேச செயலகப்பகுதிகளே பட்டி யலில் வெட்டப்பட்டுள்ளதால், இப்பகுதிகளில் பணியாற்றும் எந்த அரச ஊழியர்களுக்கும் ஊக்குவிப்புப் படி இல்லை. இதன்படி, படையினர் இருக்கின்ற பகுதிகளில்தான் பயங்கர வாதப் பிரச்சினை நிலவுவதால், அப்பகுதிப் பணியாளர்க ளுக்கே சிரமப் படி வழங்கப்பட வேண்டும் என அரசு கணித்திருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி களில் கடமைபுரியும் ஊழியர்கள் தங்கள் மாதாந்த வேதனத் தில் 25 வீதத்தை (அல்லது வருடத்துக்கு மொத்தமாக), அவர்களின் மண்மீட்பு நிதிக்கு செலுத்த வேண்டும் என கேட்கப்பட்டுள்ளார்களாம். இதற்கு மேல் இந்த ஊக்குவிப்புப் படியையும், மண்மீட்பு நிதியையும் எப்படி சேர்த்து எழுதுவது என்பது எனக்குப் புரியவில்லை.

– சோலையூரான்

"கட்டாயச் சூழலில் தோன்றும் ஒற்றுமை உணர்வு கேள்விக்குரியதே! மற்றவர்களை மாட்டவைத்து முதலில் எப்படி நாம் தப்பலாம் என்பதையே ஒவ்வொருவரும் முக்கியமாக நினைப்பார்கள்."
– ஸீக்ஃப்ரீட் லென்ஸ்

www.padippakam.com

படிப்பகம்

# "தேசியப் பிரச்சினையும் அதிகாரப் பகிர்வும்"

## திருமலைக் கருத்தரங்கில் இருந்து

**கடந்த 17.10.95 அன்று திருமலை சமூக அபிவிருத்தி மன்றம் தேசிய பிரச்சினையும், அதிகாரப்பகிர்வும் என்ற அடிப்படையில் ஒரு கருத்தரங்கை நடாத்தியது. திரு எம்.ஐ.எம்.ஜபார் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் அரசியல் யாப்பு சீர்திருத்த இயக்கத்தின் இணைப்பாளர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களும், மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. லோரன்ஸ் அவர்களும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் கலந்துகொண்டு கருத்துரையாற்றினர்.**

### "அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான அரசின் யோசனைகளும் அதன் போதாமைகளும்" என்ற தலைப்பில் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் உரையிலிருந்து....

முதன்முதலாக இந்த நாட்டில் இருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப்பகிர்வென்ற அடிப்படையிலான ஒரு விடயம் 1987இல் ஏற்படுத்தப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பின்னர் இங்கே அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இங்கே மாகாணசபைகள் என்ற விடயமும் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை அரசியல் சாசனத்தில் 13வது திருத்தச் சட்டமூலத்தினூடாக இந்த மாகாண அரசுகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டது.

இந்த அரசியல் சாசனத்தின் 76வது பிரிவைப்பார்த்தீர்களாயின் பாராளுமன்றம் அதற்கிருக்கக்கூடிய சட்டவாக்கும்உரிமையைவேறு யாருக்கும் கொடுக்க முடியாது என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மாகாண அரசுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டது.

இங்கு இரண்டு விடயத்தை நீங்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஒன்று அதிகாரப்பரவலாக்கல் மற்றது அதிகாரப்பகிர்வு. உண்மையிலேயே, 1987இல் ஏற்படுத்திய இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் மட்டுமே இந்த மாகாணங்களுக்கு வழங்கப்பட்டது; அதிகாரம் பகிரப்படவில்லை.

ஏனென்றால், சட்டவாக்கும் உரிமை பாராளுமன்றத்திற்கு இருப்பதால், சட்டவாக்கும் உரிமை பாராளுமன்றத்திற்கு மட்டுமே என்ற அடிப்படையில் அதிகாரம் பரவலாக்கப்பட்டதே தவிர, அதிகாரங்கள் பகிரப்படவில்லை என்பதே உண்மையாகும். அதனால்தான் மாகாண சபைகள் கூட சரியான முறையில் வெற்றிகரமாக செயற்பட முடியவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதன் பின்னர் இந்த தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடந்த பாராளுமன்றத்தின்போது மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இதற்கு பல்வேறுபட்ட தனிநபர்கள் பல்வேறுபட்ட ஆலோசனைகளை முன்வைத்தார்கள். கிட்டத்தட்ட குட்டிப் பாராளுமன்றம்போல் இருந்த இந்தத் தெரிவுக்குழு இறுதியாக ஒரு சரியான தீர்விற்கு வரமுடியாமல் போய்விட்டது. ஆனால் அவர்கள் குறிப்பிட்ட மூன்று விடயங்களை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தார்கள்.

1. இலங்கையில் இருக்கக்கூடிய தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக இந்திய அரசியல் சாசனத்தில் இருக்கக்கூடியதான அதிகாரங்கள் கொடுக்கப்படல் வேண்டும்.

2. 13வது திருத்தச் சட்டமூலத்தைப் பார்த்தீர்களேயானால் மூன்றுவிதமான நிரல்கள் உள்ளன. மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள், மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள், மத்தியும் மாகாணமும் சேர்ந்துசெய்யும் அதிகாரங்கள் என்ற மூன்றுவிதமான அதிகாரங்கள் உள்ளன. இந்தத் தெரிவுக்குழு இரண்டாவதாக முன்வைத்த யோசனையானது மத்தியும் மாகாணமும் சேர்ந்து செய்ய வேண்டிய விடயங்களை இல்லாமல் செய்யவேண்டும் என்பதாகும்.

3. இதற்கு கைமாறாக இந்த பாராளுமன்றத் தெரிவுக்குழு, வட-கிழக்கு இணைப்பு கைவிடப்படல் வேண்டும், நாடு முழுவதும் ஒற்றையாட்சிக்குள் கொண்டுவரப்படல்வேண்டும் என்று கேட்டது.

உண்மையில் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வென்பது முழு மக்களையும் முட்டாளாக்குகின்ற விடயமாகும். இது சாத்தியப்படாத விடயமும்கூட. கடந்த அரசாங்க காலத்தில் 13வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கு கொடுக்கப்பட்ட பல்வேறுபட்ட அதிகாரங்கள் மீண்டும் மத்திய அரசால் எடுக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

சமஷ்டி அரசியலமைப்பு முறை என்பது, 'ஒதுக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் பெற முடியாது. அதாவது அந்த மாகாணசபைகளுக்கோ அல்லது பிராந்திய சபைகளுக்கோ கொடுக்கப்பட்ட அதிகாரங்களை அவர்கள் அனுபவிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் அவர்களுக்கு முழு அதிகாரங்களும் உண்டு. மத்திய அரசு அதில் தலையிட முடியாது'. இதுதான் சமஷ்டி அரசியலமைப்பின் அடிப்படை விடயமாக இருக்கின்றது.

> "இந்த அதிகாரப்பகிர்வு முழுப்பிரச்சினையின் தீர்விற்கான ஒரு பகுதி மாத்திரமே. வெறும் அதிகாரப்பகிர்வுடன் பிரச்சினை தீர்ந்துவிடாது. ஏனெனில், பிரச்சினையின் பல்வேறுபட்ட பரிமாணங்கள் இருக்கின்றன."
>
> சுரேஷ்

ஆனால் எமது அரசியல் சாசனத்தில் குறிப்பிட்டிருப்பது 'இது ஒற்றையாட்சி நாடு, 76வது சரத்தின்படி சட்டவாக்கும் உரிமை பாராளுமன்றத்திற்கே உரியது, இதை யாருக்கும் கொடுக்கமுடியாது'. இப்படியான நிலையில் வைத்துக்கொண்டு அதிகாரப்பகிர்வென்பது உண்மையிலேயே ஒரு மோசடியான விடயமாகும்.

இன்று சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்களால் சில ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. இதுவரை இது வெறும் ஆலோசனைகளே. இந்த ஆலோசனைகள் எதிரணியால் பந்தாடப்படுகின்றது. தமிழ் மக்களில் யாராவது இதுபற்றியோ இதில் உள்ள குறைபாடுகளைப் பற்றியோ வாய்திறந்து பேசவே இல்லை என்பதே கவனத்திற்குரிய விடயமாக இருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி நியாயமான அளவு ஆசனங்களைப் பாராளுமன்றத்தில் கொண்டிருந்தும் கூட, இந்த ஆலோசனைகள் உருவாக்கப்படுவதில் சம்பந்தப்பட்டிருந்தவர்கள் என்ற அடிப்படையில் அதிலிருக்கக்கூடிய குறைகள் பற்றி வாய்திறந்து சொல்ல முடியாது மென்று விழுங்குகின்ற சூழ்நிலையே இன்றுள்ளது.

இன்று அரசு முன்வைத்துள்ள இந்த ஆலோசனைகள் நிச்சயமாக இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் வந்த 13வது திருத்தச் சட்டமூலத்தையும் விட, மங்களமுனசிங்கா கமிட்டி தெரிவுசெய்த விடயங்களையும் விட செழுமைப்படுத்தப்பட்ட சில விடயங்கள் இருக்கின்றது என்பதே உண்மை. இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களும் இருக்க முடியாது.

ஆனால், இதிலும் கூட் சில குறைபாடுகள் இருக்கின்றது என்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இங்கிருப்பது ஒரு தேசிய இனப்பிரச்சினை என்று எடுத்துக் கொண்டால், இந்த தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வென்ற அடிப்படையில்தான் இந்த அதிகாரப் பகிர்வென்ற விடயம் வரவேண்டும்.

இந்த அதிகாரப்பகிர்வு முழுப்பிரச்சினையின் தீர்விற்கான ஒரு பகுதி மாத்திரமே. வெறும் அதிகாரப் பகிர்வுடன் பிரச்சினை தீர்ந்துவிடாது. ஏனெனில், பிரச்சினையின் பல்வேறுபட்ட பரிமாணங்கள் இருக்கின்றன. இந்த தீர்வுத்திட்ட ஆலோசனைகளில் வட-கிழக்கு இணைப்பு என்ற விடயம் பற்றி ஒரு வசனம் வருகின்றது... 'வட-கிழக்கு எல்லைகளை மீள் நிர்ணயம் செய்து கொள்ளல்' என்று வருகின்றது. ஆனால் வட-கிழக்கு எல்லைகளை எவ்வாறு மீள்நிர்ணயம் செய்து கொள்ளப்படும் என்பது தொடர்பாக போதிய விளக்கங்கள் இல்லை.

நாங்கள் ஜனாதிபதியை சந்தித்து உரையாடும்போது கூட, அவர், 'இது பல இனங்கள் சம்பந்தப்பட்ட விடயம். ஆகவே சிங்கள மக்கள், தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள் ஆகியோருடன் கலந்து பேசிய பின்னரே இதுபற்றிய முடிவை எடுக்கமுடியும்' என்று கூறுகின்றார்.

1987ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் கொடுக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கலில் சில அம்சங்கள் பிழையாக இருந்தாலும்கூட, அதில் ஒரு சரியான விடயமும்.... தமிழ் மக்களுக்கான நன்மையான விடயமும் வட-கிழக்கு இணைப்பு என்ற ஏற்பாடு மாத்திரமே.

1987ம் ஆண்டுக்குப் பின்னர் இன்றுவரையும் இந்த இரு மாகாணங்களும் தற்காலிகமாகவேனும் இணைந்த வட-கிழக்காகவே இருக்கின்றது. அதற்கான நிர்வாக கட்டமைப்பு 1989ம் ஆண்டு மாகாணசபைக்காலத்தில் தொடங்கப்பட்டது. இது இன்றுவரை இயங்கி வருகின்றது.

ஆனால் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்யும்போது எவ்வாறு இருக்கப்போகின்றது என்பது பற்றி யாருக்குமே தெரியாது. இந்த வட-கிழக்கு ஒன்றாக இருக்கப்போகின்றதா? அல்லது இரண்டாகவோ மூன்றாகவோ ஆகப்போகின்றதா என்பதே பெரிய கேள்வி.

கொழும்பு அரசியலைப் பொறுத்தவரையில், வட-கிழக்கை மூன்றாகப் பிரிப்பது இதற்குத் தீர்வாக இருக்கலாம் என்று யோசிப்பதாய்த் தெரியவருகின்றது. முஸ்லீம் மக்களுக்காக அம்பாறை மாவட்டத்தின் ஒரு பகுதியை ஒரு பிராந்தியமாகவும், திருமலை - மட்டக்களப்பை இணைத்து அது ஒரு பிராந்தியமாகவும், வடமாகாணத்திற்கு ஒரு பிராந்தியமாகவும் ஆக மூன்று பிராந்தியமாக பிரிப்பது. இதில் ஒரு முஸ்லீம் பிராந்தியசபை, இரண்டு தமிழ் பிராந்திய சபை, என மிக அழகாக கூறுகின்றார்கள்.

இதைப்பற்றிச் சிந்திக்கவோ இதைப்பற்றிப் பேசவோ எங்களுடைய கெட்டகாலம் பாராளுமன்றத்திலிருக்கக்கூடிய, இல்லையேல் பாராளுமன்றத்திற்கு வெளியே இருக்கக்கூடிய கட்சிகளும் சரி மக்களும் சரி முன்வந்ததாகத் தெரியவில்லை.... நிச்சயமாக முழுமையான தீர்வென்பது வெறுமனே அதிகாரப்பகிர்வு மாத்திரமல்ல, வட-கிழக்கு இணைப்பும்தான்.

இதற்கு மேலாக தேசிய இனங்களைப் பாதிக்கக்கூடிய சட்டங்களை கொண்டுவராமல், இல்லையேல் தடுக்கக்கூடிய வகையில் பாராளுமன்றத்தில் இரண்டாவது சபை ஒன்றை அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதுதான் முழுமையான தீர்வாக இருக்க முடியும்.

இவ்வாறு சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது உரையில் தெரிவித்தார்.

> "இங்குள்ள பௌத்த ஆதிக்க சக்திகளை அரசியல் ரீதியாக விரட்டவும், இந்தளவிற்கு ஒரு பிரேரணையை வைப்பதற்கும் ஆயுதப் போராட்டமானது காரணமாக அமைந்தது என்பதை சாதகமான விடயமாகக் காண்கின்றேன். பாதகமான விடயம் என்னும் பொழுது, தமிழ்-முஸ்லிம் மக்களின் முரண்பாடுகளை தோற்றுவித்தது; அப்பாவிச் சிங்கள மக்களைக் கொன்று குவித்தது; வடக்கு முஸ்லிம்கள் வடக்கிலிருந்து விரட்டப்பட்டது போன்றவை ஆகும். இந்த பாதகமான செய்கைகள் இந்த நாட்டில் உள்ள, பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று பாடுபடும் புத்திஜீவிகளை அதிருப்திக்கு இட்டுச்சென்றது என்பதே உண்மையாகும்."
>
> பாலகிருஷ்ணன்

### "இலங்கை அரசியலமைப்பின் முரண்பாடுகளும், சீர்திருத்தப் பிரேரணைகளும்" என்ற தலைப்பில் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.....

கடந்த ஆறு தசாப்தங்களாக இலங்கையின் அரசியல் ஜனநாயக வரலாற்றிலே உருவாகிய ஜனநாயக விரோதப் போக்கிலிருந்து இந்த தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படுமா என்ற கேள்வி இருந்தது. இந்த நாட்டின் தமிழ் தேசிய இனம் எதிர்நோக்கிய பிரச்சினையும், நாட்டின் ஜனநாயக மரபுகளை சீரழிக்கின்ற அதிகார அரசியல் போக்கு என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று சமாந்தரமாக வளர்ச்சியடைந்தது என்றே நான் கருதுகின்றேன். ஆகவே தேசிய இனங்களின் பிரச்சினைக்கான தீர்வை மட்டும் வைத்து, ஜனநாயக மரபுகளை சீரழிக்கின்ற அதிகார அரசியல்போக்கில் மாற்றம் காணப்படாமல் போகுமாயின் இந்த நாட்டில் உள்ள ஒட்டுமொத்த பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாகாது என்றே கருதுகின்றேன்.

தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினையை அப்போது இருந்த தமிழரசுக்கட்சி முன்வைத்த இரண்டு அடிப்படைக் கோட்பாடுகளுக்கமைய, அதாவது ஒன்று தமிழ் மக்களின் அரசியல் சுதந்திரம், மற்றது சுயாட்சிக்கான உரிமை என்ற இரண்டு கோட்பாடுகளுக்கமையவும், ஐக்கிய இலங்கையின் வரையறைக்குள்ளும் இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

பல்வேறுபட்ட இனக் குழுமங்கள் வாழும் பிரதேசத்தில் இவ்வினக் குழுமங்களின் அபிலாசைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக அமையலாம். இம் முரண்பாட்டுக்குட்பட்ட

தொடர்ச்சி.... பக். 9

www.padippakam.com



அபிலாசைகளுக்குள் ஒருமைப்படக் கூடிய ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தி, இவ்வபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடியதான ஒரு உடன்பாட்டுக்கு இவ்வினக் குழுமங்களைக் கொண்டுவரமுடியும் என்றே கருதுகின்றேன்.

இங்குள்ள தேசிய இனப்பிரச்சினையின் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட ஆயுதப்போராட்டமானது ஒருவகையில் சாதகமானதாகவும், ஒருவகையில் பாதகமானதாகவும் இருந்தது எனலாம். இங்குள்ள பௌத்த ஆதிக்க சக்திகளை அரசியல் ரீதியாக விரட்டவும், இந்தளவிற்கு ஒரு பிரேரணையை வைப்பதற்கும்ஆயுதப் போராட்டமானது காரணமாக அமைந்தது என்பதை சாதகமான விடயமாகக் காண்கின்றேன்.

பாதகமான விடயம் என்னும்பொழுது தமிழ், முஸ்லீம் மக்களின் முரண்பாடுகளை தோற்றுவித்தது; அப்பாவிச் சிங்கள மக்களைக் கொன்று குவித்தது; வடக்கு முஸ்லீம்கள் வடக்கிலிருந்து விரட்டப்பட்டது போன்றவை ஆகும். இந்த பாதகமான செய்கைகள் இந்த நாட்டில் உள்ள, பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று பாடுபடும் புத்திஜீவிகளை ஒரு அதிருப்திக்கு இட்டுச்சென்றது என்பதே உண்மையாகும்.

இன்று சிங்கள மக்கள் மத்தியில் இலங்கையின் இனங்களுக்கிடையேயான உறவுபற்றி நான்கு விதமான கருத்துக்கள் இருக்கின்றன.

1. பூமிபுத்திரா அமைப்பு என்பது சில அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது. அதாவது 'இது சிங்கள பௌத்த நாடு. இங்கு யார் வந்தும் குடியேறலாம். ஆனால் பௌத்த மதத்தையும் சிங்கள மொழியையும் பின்பற்ற வேண்டும். அப்படிப்பட்டவர்கள் மட்டும்தான் இங்குவாழ முடியும்'. இன்று இந்தக் கோட்பாட்டின் தலைவராக சட்டத்தரணி ஹரிஸ்சந்திர விஜயதுங்க இருக்கிறார். இந்தக் கோட்பாட்டை இந்த நாட்டின் மொத்தச் சனத்தொகையின் ஒரு வீதமானோரே ஆதரிக்கின்றார்கள் அல்லது பின்பற்றுகின்றார்கள்.

2. அடுத்து ஜாதிக சிந்தனய அமைப்பு. 'இலங்கையிலேயே சிங்கள பௌத்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். சிங்களவர்கள்தான் பூர்வீக குடிமக்கள். தமிழர்கள் பிரித்தானியரின் வருகைக்குப் பின்னர்தான் வந்தவர்கள். இவர்கள் இங்கு தாராளமாக வாழலாம். ஆனால் சிங்கள பௌத்த ஆதிக்கத்திற்குட்பட்டவர்களாக வாழ வேண்டும். அத்தோடு புத்தசாசனம் பாதுகாக்கப்படல் வேண்டும். சிங்கள பௌத்தக் கலாச்சாரம் முதன்மைக் கலாச்சாரமாக இருக்க வேண்டும். ஏனையோர்கள் அவர்களது கலாச்சாரத்தோடு வாழலாம். ஆனால் சமஉரிமை கேட்பதற்கோஅல்லது அதிகாரப்பகிர்விற்கோ அருகதையற்றவர்கள். அப்படியான கோரிக்கைகள் போராட்டங்கள் முறியடிக்கப்படல் வேண்டும்' என்பது இந்த அமைப்பின் கோட்பாடு. பேராசிரியர் நளின் டி சில்வா, குணதாசஅமரசேகர போன்றவர்கள் இதைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். இதற்கும் இங்கு மிகச் சிறுபான்மையினரின் ஆதரவுதான் இருக்கிறது.

3. மூன்றாவதாக பல்லினங்களையும் கொண்ட ஐக்கிய இலங்கை என்ற அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படல் வேண்டும் என்பது. இதுவே அறிவுரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் வளர்ச்சியடைந்தவர்களின் கருத்தாகும். இதற்கு, முன்பு குறிப்பிட்ட ஆதரவுகளைவிட அதிகமானோர் ஆதரவு இருக்கிறது.

4. இங்குள்ள தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. அவர்கள் சமத்துவமாக வாழ வேண்டும். அவர்களுக்கு ஒற்றையாட்சிக்குட்பட்டு அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும் என்பது நான்காவது கருத்து. இதற்கு மிகக் கணிசமானோர் அதாவது அதிபெரும்பான்மையோர் ஆதரவாகவுள்ளனர்.

இன்று வட-கிழக்கு பிரச்சினையை எடுத்துக்கொண்டால் பிராந்திய சுயாட்சிக்கான அங்கீகாரத்தைப் பெறுவதும், வட-கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லீம் மக்களின் உறவுகள் தொடர்பாக ஒரு முறையான தீர்வு எடுப்பதும் ஒன்றுக்கொன்று இணைந்த விடயமாகும்.

அண்மைக்கால தமிழ்-முஸ்லீம் மக்களின் முரண்பாடானது பல்வேறு வகையிலும், வட-கிழக்கு பிராந்திய அதிகாரப்பகிர்வுக்கு முக்கிய தடையாக இருக்கின்றது. எப்படி வட-கிழக்கிலுள்ள மக்கள் சிங்கள ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருக்க மாட்டோம் என்கின்றோமோ, அதேபோல் வட-கிழக்கில் ஏற்படப்போகும் தமிழ் அதிகாரத்திற்குட்பட்டுவிடாத வகையில், பல்லின கோட்பாட்டை முழுமையாக ஏற்று பல்லினக் கலாச்சாரத்தை-மதத்தை ஏற்று நடக்கின்ற ஆட்சியாக அமைவது உறுதிசெய்யப்படும்பட்சத்தில்தான் அங்கு நிரந்தர சமாதானம் ஏற்படும் என்று கருதுகின்றேன்.

இறுதியில் சமூக அபிவிருத்தி மன்றத்தின் செயலாளர் திரு. ரகுநாதன் அவர்களால் நன்றியுரை கூறப்பட்டது. நன்றியுரையின் போது, இவ்வாலோசனைகள் தொடர்பாகவும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் முகமாகவும் தமிழ் மக்கள் தமது குரல்களை வெளிப்படுத்த வேண்டும் என்றும், அவர்கள் தமது கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு முன்வைக்கவேண்டும் என்றும், இப்படியானவிடயங்களுக்கு சமூக அபிவிருத்தி மன்றம் உறுதுணையாகவும் ஒத்தாசையாகவும் இருக்கும் என்றும் கூறினார்.

நூற்றுக்கணக்கில் மாகாணசபையின் நிர்வாகத்தில் பங்குபற்றும் அலுவலர்களும், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கட்சிகளின் முக்கியஸ்தர்களும் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். ●

## "மலையக மக்களும் அரசியல் தீர்வும்" என்ற தலைப்பில் திரு. லோறன்ஸ் ஆற்றிய உரையிலிருந்து....

இந்த நாட்டில் இருக்கக்கூடிய தேசிய இனங்களின் பிரச்சினை என்ன என்று கண்டறிந்து, அதை முழுமையாகத் தீர்ப்பதற்காக எடுக்கும் நடவடிக்கைதான் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான உண்மையான முயற்சியாகும். அதைவிடுத்து வட-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவதற்காகத்தான் தீர்வு என்றால், உண்மையில் இந்த நாட்டிலுள்ள தேசிய இனங்களின் பிரச்சினையை முற்றுமுழுதாய் ஒருகாலமும் தீர்க்கப் போவதில்லை என்றே நான் கருதுகின்றேன்.

அரசு இன்று வட-கிழக்குப் பிரச்சினையைத் தீர்த்தால் நாளை முஸ்லீம் மக்களுடைய பிரச்சினையோ அல்லது மலையக மக்களுடையபிரச்சினையோ தலைதூக்கத்தான்போகிறது. எனவே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று எடுக்கும்போது மலையக மக்களின் பிரச்சினையையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கான தீர்வையும் உள்ளடக்கியதாகஅமையவேண்டும் என்பதே எமது மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும்.

உலகத்தில் 12 லட்சம் மக்கள் சொந்த நிலமில்லாமல், வீடில்லாமல், பிரஜாவுரிமை இல்லாமல் இருக்கின்றார்கள் என்றால் அது மலையக மக்கள்தான். ஒரு கொடிய யுத்தத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையும் உரிமையும் அழிக்கப்படலாம். ஆனால் அமைதியாக ஒரு சமூகத்தின் அனைத்து உரிமைகளும் பறிக்கப்படலாம் என்பதற்கு மலையக மக்களே ஒரு உதாரணமாகும்.

> "உலகத்தில் 12 லட்சம் மக்கள் சொந்த நிலமில்லாமல், வீடில்லாமல், பிரஜாவுரிமை இல்லாமல் இருக்கின்றார்கள் என்றால் அது மலையக மக்கள்தான். ஒரு கொடிய யுத்தத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையும் உரிமையும் அழிக்கப்படலாம். ஆனால் அமைதியாக ஒரு சமுகத்தின் அனைத்து உரிமைகளும் பறிக்கப்படலாம் என்பதற்கு மலையக மக்களே ஒரு உதாரணமாகும்."
>
> லோறன்ஸ்


இந்த நாட்டிலிருக்கின்ற தேசிய இனப்பிரச்சினைக்கு பிராந்திய அடிப்படையிலேயே தீர்வுகாண வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். வட-கிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு சமமான, முஸ்லீம் மக்களுக்குச் சமமான, 12 லட்சம் மலையக மக்களுக்கு பிராந்திய அடிப்படையிலேயே அவர்கள் வாழ்கின்ற பகுதியில் அரசியல் அந்தஸ்தோடு கௌரவமாக சகல அதிகாரங்களோடும் வாழ்வதற்கான சூழ்நிலை தோன்ற வேண்டும்.

இன்று இருக்கக்கூடிய பாராளுமன்றத்தில் பெரும் எண்ணிக்கையில் சிறுபான்மை மக்களின் உறுப்பினர்கள் இருந்தால் மட்டும் போதாது. சிறுபான்மை இனங்களை ஒடுக்கும் சட்டம் கொண்டுவரும்போது இந்த சிறுபான்மை உறுப்பினர்கள் எதுவும் செய்யமுடியாது என்பதே கடந்தகால உண்மையாகும். கடந்த காலத்தில் மலையக மக்களின் உறுப்பினர்கள் சபையில் இருக்கும்போதுதான் மலையகமக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. தமிழ் பிரதிநிதிகள் அதிகமாக இருக்கும்போதுதான் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

இந்த பாராளுமன்றத்தில் எந்த சட்டமூலம் கொண்டுவந்தாலும் மூன்றில் இரண்டு பங்கு பலத்தில்தான் நிறைவேற்ற முடியும். சிறுபான்மையினரின் உரிமைகள் பாதிக்கப்படக்கூடிய ஒரு சட்டமூலம் கொண்டுவந்தால், இருக்கக் கூடிய மூன்று சிறுபான்மையினரும் சேர்ந்தாலும் அதைத் தடுக்க முடியாது.

ஆகவேதான் இங்குள்ள சிறுபான்மையினர் பற்றி சட்டமூலம் கொண்டுவரும் பட்சத்தில், அந்த சிறுபான்மை உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குப்பலம் இருந்தால் மட்டுமே அந்த சட்டமூலம் நிறைவேற்றப்படல் வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

# குறுக்கெழுத்துப் போட்டி-17



## இடமிருந்து வலம்

1. வெளியுறவு அமைச்சர்.
6. நேரம்.
8. ஏனைய.
9. மப்புடன் சேர்ந்து வருவது.
11. தூரத்தைக் கணக்கிடும் ஓர் அளவு.
12. மாதத்தில் குறிப்பிட்ட எண்ணுடைய நாள்.
13. நளபாகம்.
15. இலங்கைத் தமிழ்த் திரைப்படம் ஒன்று.
16. தேருக்கு சாரதி போல யானைக்கு ---.
18. இரவில் இரை தேடும் பறவை.
19. வருத்தும் துன்பம்.
20. சிறப்புமிக்க காலகட்டம்.
22. கடையெழுத்தில்லாத 'வந்தி' தலைகீழாக.
23. துரும்பானாலும துணைவி மண்ணானாலும்---.
24. அழிக்கும் செயல்.
26. இடையூறு
27. காலன்.
29. காணிக்கை. (குழம்பி)
32. வயதான பிறகு முதுகில் விழுவது.
33. துயரத்தைச் சொல்லி அரற்று.
34. புலி போலச் சிறிய இனம். (தலைகீழ்)

## மேலிருந்து கீழ்

1. பொட்டம்மானுக்கு பதில்.
2. கெட்டித்தனம்.
3. வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசு.
4. அரசன் மந்திரி பிரதானிகளுடன் கூடித் திட்டம் வகுத்தல்.
5. கறுப்பாயிருக்கும் காகம் அல்ல, றோட்டில் இருக்கும் கல் அல்ல. (தலைகீழ்)
6. பதுமை.
7. உறக்கம்.
10. முகத்திற்குப் பவுடர் பூசுவதைப் பார்க்க கண்ணாடிக்கு இது பூச வேண்டும்.
14. போட்டி. (குழம்பி)
15. தியாகத்தின் மறு பெயர், அன்பின் வடிவம் - மாமியார் ஆகும்வரை.
16. பாரதிதாசனுக்கு பட்டப் பெயர்.
17. அனுமதி மறுப்பு.
18. சூரியன்.
21. கதையோடு கூடிய நீண்ட கவிதை.
23. எல்லோர்க்கும் இது நிச்சயமானது.
25. குறியீடு. (தலைகீழ்)
28. அகங்காரம்.
30. ஒன்றல்ல.
31. நெல்லை அளக்கும் ஓர் அளவை அலகு கடைசி எழுத்தில்லாமல். (தலைகீழ்)
32. சொல்.

## கு.எ.போட்டி-16 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. ஜரிஸ்மோனா | 1. ஐயமிட்டுண் |
| 4. திகதி | 2. ஸ்பரிசம் |
| 6. பனை | 3. மோனை |
| 7. கத்தி | 4. லத்தி |
| 9. மிளிரி | 5. கதிர்காம(ம்) |
| 10. பாவலர் | 7. கவரி |
| 11. சகோதரி | 8. பார்வதி |
| 13. காவல் | 10. பாத(ம்) |
| 15. மேம்பாடு | 12. கோமேதகம் |
| 17. சாமந்தி | 14. பந்தல் |
| 18. மண் | 16. பாமரன் |
| 19. தமுக்கு | 17. சாகுந்தலம் |
| 21. ரசிகன் | 20. முன் |
| 23. பகை | 22. சினம் |
| 25. அன்னம் | 24. கைப்புண் |
| 26. மாதவி | 25. அழகு |
| 28. புல்லரிப்பு | 26. வில்ல(ன்) |
| 30. குறி | 27. மாரி |
| 31. இல்லம் 32. பாண் | 28. புல் 29. (அ)ப்பா |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**ஏ. ஜோதிலிங்கம்**
**250, சென்ட்ரல் றோட்,**
**திருகோணமலை.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆறு பேர்கள் வருமாறு:**

1. என். ஈஸ்வரன்,
பண்டாரிகுளம், வவுனியா.
2. சி. பிரதீபா,
284, பிரதான வீதி, திருகோணமலை.
3. ம. அகல்ஜன்,
சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா.
4. க. அழகையா,
38, மாணிக்கவாசகர் தெரு, திருகோணமலை.
5. சி. நிமலன்,
14, கரப்பன்காடு, வவுனியா.
6. பா. பவானிதேவி,
28/3, உவர்மலை, திருகோணமலை.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 20ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

படிப்பகம்

# சொருகியிருக்கிற அகப்பை சோதியள்ள வரலாமோ?

ஈ.பி.டி.பி. இயக்கத்தினரால் வெளியிடப்படும் தினமுரசுப் பத்திரிகையில் (ஒக். 08-14, 1995) அதன் ஆசிரியரும், தற்போதைய ஒன்பது தீவுப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவருமாகிய ரமேஷ் எனவும் அற்புதன் எனவும் அழைக்கப்படும் நடராஜா அற்புதராசா என்பவர் வாராந்தம் எழுதிவரும் 'அதிரடி அய்யாத்துரை' என்ற பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எப். என்ற இயக்கம், அரசியல்தீர்வுத்திட்ட குடாறியபின் இன்னோர் இயக்கத்தின் (ஈ.பி.டி.பி.யினரின்) ஆலோசனைகளை கொப்பியடித்து அரசாங்கத்திற்கு கொடுத்துள்ளதாக எழுதியுள்ளார்.

இந்தப் பத்திரிகையில் துரையப்பா முதல் காமினிவரை என்ற அரசியல் தொடரும் இவரால் அற்புதன் என்ற பெயரில் எழுதப்பட்டு வருகின்றது. அந்த அரசியல் தொடருக்கூடாக மூடிமறைக்கப்பட்டும், திரிபுபடுத்தப்பட்டும் இருக்கும் அண்மைய வரலாற்றுச் சம்பவங்கள் ஏராளம் என்பதுடன், தன்னை பிரபல்யப்படுத்திக் கொள்வதற்காகவே அக்கட்டுரைத் தொடரை எழுதுவதாகத் தோன்றுகின்றது. அவரது கட்டுரைத் தொடரைப்பற்றி பின்னர் மிகவும் ஆழமாகப் பார்க்கலாம்.


அதிரடி ஐயாத்துரை

ஆனால் ஈ.பி.டி.பி.யின் அரசியல் தீர்வு ஆலோசனை தொடர்பான திருத்தங்களை நாம் கொப்பியடித்தோம் என்ற அவரின் கருத்துச் சம்பந்தமாக சில விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

முதலாவதாக, 1987ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினை ஏற்றுக்கொண்டு ஓர் மாகாண அரசை ஒன்றரை வருடகாலம் நடாத்திய அனுபவத்தை ஈ.பி.ஆர்.எல்.எப். கொண்டிருக்கின்றது என்பதை தினமுரசு பத்திரிகை ஆசிரியர் அவர்கள் உணரவேண்டும். இந்தக்காலகட்டத்தில் சென்னையில் 10லட்சம் ரூபா கப்பம் கேட்டு ஓர் சிறுவனைக் கடத்தியதற்காக இவரும், இவரது தலைவரும், ஈ.பி.ஆர்.எல்.எப்.இலிருந்து வெளியேற்றப்பட்ட சில உறுப்பினர்களும் சென்னை மத்திய சிறையில் கைதிகளாக இருந்து வந்தார்கள். எனவே மாகாண அரசைப்பற்றியோ மாகாண அரசிற்கான அதிகாரங்கள் பற்றியோ, இது தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எப். இன் நிலைப்பாடுகள் பற்றியோ இவர்கள் அறிந்திருக்க நியாயமில்லைத்தான் .

ஆனால் பிணையில் வெளிவந்து இலங்கைக்கு தப்பிவந்த இவர்கள் பிரேமதாசாவின் ஆதரவுடன் தமது கட்சியை நடாத்தும் போதாவது, அதற்கு முன்னர் நடந்த அரசியல் நிகழ்வுகள் பற்றிக் கொஞ்சமாவது படித்திருக்க வேண்டும். ஆனால் அதனைவிடுத்து, இன்று, தமது திருத்தங்களை ஈ.பி.ஆர்.எல்.எப். கொப்பி அடித்தது என்று கூறுவது இவர்களது அரசியல் வங்குரோத்துத்தனத்தையே காட்டுகின்றது.

1988ம் ஆண்டு பிற்பகுதியில் வட-கிழக்கு மாகாண அரசு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1990ம் ஆண்டு அது பிரேமதாசா அரசாங்கத்தால் சீர்குலைக்கப்படும்வரையில் அதிகாரப் பகிர்வு தொடர்பான திருத்தங்களையும், அதற்காக அரசியல் சாசனத்தில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் தொடர்பாகவும் ஈ.பி.ஆர்.எல்.எப். சகல விடயங்களையும் உள்ளடக்கிய முழுமையான அரசியற்சட்ட வரைவையே பிரேமதாசா அரசாங்கத்திற்குக் கொடுத்தது.

அதுமாத்திரமல்லாமல் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களில் எவை எவை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எவ்வெவற்றை மத்தியஅரசும், அதனது அதிகாரிகளும் மாகாணங்களுக்கு கொடுக்க தயங்குகின்றார்கள் என்பவற்றையும்கூட நாம் அறிக்கையாக அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுக்கு கையளித்திருந்தோம்.

இதன் பின்னர் 89ம் ஆண்டு தொடக்கம் 94ம் ஆண்டுவரை பாராளுமன்றத்தில் அதிகாரப்பகிர்விற்காகவும் முழுமையான தீர்விற்காகவும் குரல்கொடுத்து வந்தவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப். இனர் மாத்திரமேயாகும். அதுமாத்திரமல்லாமல், அன்று உருவாக்கப்பட்டிருந்த மங்களமுனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழுவிலும் நாம் தீர்விற்கான ஆலோசனைகளை முன்வைத்திருந்தோம். அதன் பின்னர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான இன்றைய பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கும் எமது ஆலோசனைகளின் கருத்துவடிவத்தைக் கூறியிருந்தோம்.

ஆனால், இதுவரையில் இந்த படிமுறைகள் எதிலுமே பங்குபற்றாத ஈ.பி.டி.பி.யினர் இப்பொழுதுதான் முதல்முறையாக அதிகாரப்பகிர்வு தொடர்பாக பேசத் தொடங்கியுள்ளார்கள். நிச்சயமாக ஈ.பி.ஆர்.எல்.எப். இன் பெரும்பாலான அரசியல்கருத்துக்களைஅவர்கள் பின்பற்றுகின்றார்கள் என்பது உண்மை. அது எமக்கும் மிகவும் சந்தோசமே. சரியான அரசியல் கருத்துக்களை எவரும் பின்பற்றுவதை யாரும் குற்றம்சாட்ட முடியாது. நிலமை இவ்வாறிருக்க, தமது ஆலோசனைகளை நாம் கொப்பியடித்தோம் எனக்கூறுவது சிரிப்புக்குரிய விடயமாகும்.

ஓர் சிறிய விடயத்தை இங்கு குறிப்பிடலாம். பிராந்திய அரசுகள் தமக்குரிய தனித்துவமான கொடி, சின்னம், கீதம் போன்றவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என ஒரு திருத்தத்தை இவர்கள் முன்மொழிகின்றார்கள். ஆனால், ஏற்கனவே இருக்கக்கூடிய மாகாண அரசுகள் இவற்றை சட்டபூர்வமாகக் கொண்டிருக்கின்றன என்பதனை இவர்கள் அறியாமலிருப்பதிலிருந்து இவர்களின் அதிகாரப் பகிர்வுதொடர்பானஆழமான சிந்தனைகளை நாம் அறிந்து கொள்ளலாம்.

வட-கிழக்கு மாகாணம் இன்றும் சூரியனைக் கொண்ட மூவர்ணத்திலான தனது கொடியையும், வட-கிழக்கு மாகாணத்திற்குரிய இலச்சினையையும் கொண்டு இருக்கின்றது. 13வது திருத்தச் சட்டத்தினூடாக ஏற்கனவே இவ்வாறான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எமது கோரிக்கைகள், திருத்தங்கள் யாவும் இவற்றுக்கு மேலாக இருக்க வேண்டுமே தவிர, ஏற்கனவே உள்ளதையே மீண்டும் கேட்பது மக்களை முட்டாளாக்க உதவுமே தவிர சரியான கோரிக்கைகளாக இருக்காது.

இவ்வாறான முட்டாள்தனங்களை கொப்பியடிக்கவேண்டிய அவசியம் ஈ.பி.ஆர்.எல்.எப். இற்குஇல்லை என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றோம். அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும் முழுமையான தீர்வு தொடர்பாகவும் கருத்துக்களையும், ஆலோசனைகளையும், திருத்தங்களையும் கூறக்கூடிய பக்குவமும், வல்லமையும், அனுபவமும், அதற்கான முதிர்ச்சியும் ஏனைய இயக்கங்களை விட, ஏனைய தமிழ் கட்சிகளைவிட ஈ.பி.ஆர்.எல்.எப். இற்கு இருக்கின்றது என்பதை நாம் மிகவும் அடக்கத்துடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

சூடுதணிந்த பின் எமது ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக தினமுரசு ஆசிரியர் குறிப்பிடுகின்றார். சுடச்சுட செய்து முடித்து விட்டுப் போவதற்கு இது என்ன தின்பண்டம் என்று புரியவில்லை. ஆலோசனைகளுக்கான திருத்தங்களை ஜனாதிபதி அவர்கள் கேட்டுள்ளார். ஆலோசனைகள் இன்னும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கே கொண்டு செல்லப்படவில்லை. இது ஓர் தேசிய இனப்பிரச்சினையின் தீர்விற்கான ஆலோசனைகள்... ஆகவே, இது மிகவும் நிதானமாகவும் கவனமாகவும் கையாளப்பட வேண்டியது.

இதனை விடுத்து, அரசியல் வியாபாரத்திற்காக சூட்டோடு கொடுக்கின்றோம் என்ற பெயரில் விடயங்களை விளங்கிக் கொள்ளாமல் ஏனோதானோ என்ற வகையில் அறிக்கைகளை விடுப்பதானது தமிழ் மக்களின் எதிர்காலத்தை இருட்டுக்குள் தள்ளிவிடும். இனிமேலாவது சம்மந்தப்பட்டவர்கள் இதனைப் புரிந்துகொள்வார்கள் என்று நம்புகின்றோம். ●

## மரணம் அடையாப் பெருநிலைக் கவிஞன்



ஒருதுறை யிருந்து மறுதுறைக் கென்னை
ஏற்றிச் செல்லுதற் கிங்கெழும் இறப்பெனும்
ஓடக்காரா! ஒழுகுவை! மரணம்
அடையாப் பெருநிலைக் கடைக்கல மான
கவிஞன்; நித்தியன்; சுழலும்
புவியினை இயக்கும் பொறியான்; போய்வா!
- தான்தோன்றிக் கவிராயர்

இலங்கைத் தமிழிலக்கியப் பரப்பில் முற்போக்குச் சிந்தனையோடு கவிதை பாடியவர்களில், தான்தோன்றிக் கவிராயர் என்கிற சில்லையூர் செல்வராசன் முக்கியமானவர். கவிதைகள், கவியரங்குகள், நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாகவும், இயக்கமாகவும் செயற்பட்டவர். ஈழத்தில் இடதுசாரிச் சிந்தனை வளர்ச்சியின் ஆரம்பகாலச் செயற்பாடுகளில் சில்லையூராரின் பங்களிப்புக் கணிசமானது.

"காலனுக் கென்றன்
காயம் பலிப்படினும்
காலத்துக் கென்றன்
கவிதை பலியாது"

என்று மிடுக்கோடு முழங்கிய தான்தோன்றிக் கவிராயரின் காயம் இன்று உலகில் இல்லை. அவரது குடும்பத்தினர்க்கும், நண்பர்களுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அடிபட்டுப் போகும் அபாயம்

மட்டக்களப்பில் கல்வியியற் கல்லூரி திறக்கப்பட வேண்டும் என்ற நீண்டநாட் கோரிக்கைக்கு இணங்க மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இடத்தினில் மேற்படி கல்வியியற் கல்லூரி தொடங்குவதற்கான எற்பாடுகள் நடந்து முடிந்துள்ளது. இதுதான் இப்போது பிரச்சினையாகிவிட்டது. கல்வியியற்கல்லூரி வந்தவேளை ஆசிரியர்பயிற்சிக் கலாசாலை அடிபட்டுப்போகும் அபாயத்தை தோற்றுவித்துள்ளது.

ஆரம்பத்தில் கலாசாலை கட்டிடத் தொகுதியிலிருந்து இழுபறிகளின் பின் கல்வியற் கல்லூரி மாணவர்களுக்கென விடுதிகள் மாத்திரமே எடுக்கப்பட்டன. இப்போது கலாசாலைக்கு உரித்தான விரிவுரை மண்டபங்களையும், போசன மண்டபங்களையும் எடுத்துவிட்டார்கள். இப்படி மெல்ல மெல்ல சுவீகரிக்கும் கல்வியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலையைவிழுங்கிவிடும் என்ற பயத்துடன், கலாசாலைக்குசேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்கள் படிப்படியாக குறைக்கப்பட்டுவந்துள்ளதுடன், இங்கு வரவேண்டியவர்கள் அட்டாளைச்சேனைஆசிரியர் கலாசாலைக்கு அனுப்பிவைக்கப்படுவதும் ஏனென்று புரியவில்லை.

இத்தகைய நெருக்கடியில் கலாசாலையின் கட்டிடத் தொகுதியில் தொடங்கப்படவிருக்கும் கல்வியற் கல்லூரிக்கு எதிர்ப்பைத் தெரிவித்து ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் விரிவுரைகளை பகிஷ்கரிக்கத் தொடங்கியுள்ளனர்.

★ கல்வியற் கல்லூரி மட்டக்களப்பில் ஆரம்பமாவதை வரவேற்கும் அதேவேளை அக்கல்லூரியினால் ஆசிரியர் கலாசாலை பாதிக்கப்படும் செயற்திட்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

★ ஆசிரியர் கலாசாலையின் கட்டிடங்கள், விடுதிகளை பறித்தெடுப்பது எந்தவிதத்திலும் நல்லதல்ல. தற்காலிக ஏற்பாட்டால் இவை எடுக்கப்பட்டாலும் இவற்றை நிரந்தரமாக்க முயலும் எந்த நடிவடிக்கையும் தடுக்கப்பட வேண்டும். ஒன்றை உருவாக்க இன்னொன்றை இழப்பது இந்த இடத்தில் பொருத்தமில்லை.

★ கல்வியற் கல்லூரியும் பரந்த நோக்குடைய தாபனம். தனியான இடத்தை தேர்ந்தெடுத்து அதனை செயற்படுத்துவதாலேயே ஏனைய கல்வியற் கல்லூரிகளுக்கான வசதிகளைப்போல (வவுனியா, புத்தளை க. கல்லூரிகள்) நாமும் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

★ இரு தாபனங்களும் ஒரு வளவினுள் கட்டிடத் தொகுதியினில் செயற்படுவது இரு தாபனங்களுக்கிடையேயும் பல்விதமான சிக்கல்களை எதிர்காலத்தில் தோற்றுவிக்கும்.

எனவே கல்வியற் கல்லூரிக்கு தனியான இடத்தைத் தேர்ந்தெடுத்து அது முறையாக இயங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்து கலாசாலை மாணவர்களால் விரிவுரைகளைபுறக்கணிக்கும் பகிஷ்கரிப்பு இன்றுவரைதொடர்கிறது. நிர்வாகத்தினால் எந்தவித பதிலும் கொடுக்கப்படவில்லை..

இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவது அவசியமானது என்பதுடன் அதற்கான முயற்சிகள் உடன் மேற்கொள்ளப்படுவதே ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் நிரந்தர இருப்பை உறுதிப்படுத்தும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF
22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமசந்திரன் அவர்களால் இரத்தன்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்